வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 12.10.2024 சனிக்கிழமை இதழ் : 286 பக்கங்கள் : 12

## பாராளுமன்ற தேர்தல்:

# 22 தேர்தல் மாவட்டங்களில் 690 வேட்புமனுக்கள் தாக்கல்!

## வடக்கில் - 91, கிழக்கில் - 144

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 12

**நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் நாடு முழுவதும் போட்டியிடுவதற்கு அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சை குழுக்கள் சார்ந்து 690 வேட்புமனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்று தேர்தல்கள் ஆணைக் குழு அறிவித்துள்ளது.**

இதனிடையே, வடக்கு மாகாணத்தில் கட்சிகள் மற்றும் சுயேச்சை குழுக்கள் சார்ந்து 91 வேட்பு மனுக்களும் கிழக்கு மாகாணத்தில் கட்சிகள், சுயேச்சை குழுக்கள் சார்ந்து 144 வேட்பு மனுக்களும் தாக்கல் செய் யப்பட்டுள்ளன.

நாட்டில் எதிர்வரும் நவம்பர் 14ஆம் திகதி பாராளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது. இதில் போட்டியிடும் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் வேட்பு மனு தாக்கல் செய்யும் காலம் நேற்று வெள்ளிக்கிழமை 11

## யாழில் 6 ஆசனங்களுக்கு 396 வேட்பாளர்கள் போட்டி!

*23 கட்சிகள், 21 சுயேச்சைகள் களத்தில்*

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 12

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் 6 பாராளுமன்ற ஆசனங்களை கைப்பற்றுவதற்காக 396 பேர் போட்டியிடுகின்றனர். 23 அரசியல் கட்சிகளும் 21 சுயேச்சை குழுக்களும் யாழ்ப்பாணத்தில் களமிறங்கியுள்ளன.

எதிர்வரும் நவம்பர் 14ஆம் திகதி பாராளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது. இந்தத் தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சை குழுக்கள் கடந்த 4ஆம் திகதி முதல் நேற்று 11

## வியாழேந்திரனின் வேட்புமனு நிராகரிப்பு!

மட்டக்களப்பு, ஒக். 12

முன்னாள் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் தலைமையில் மட்டக்களப்பில் தாக்கல் செய்த ஜனநாயக தேசிய முன்னணி கட்சியின் வேட்புமனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் ச. வியாழேந்திரன் ஜனநாயக தேசிய முன்னணி கட்சியின் சார்பில் போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்திருந்தார்.

நேற்றைய தினம் அவர் வேட்புமனுவை தாக்கல் செய்திருந்த நிலையில் சத்திய கடதாசிகள் சமர்ப்பிக்கப்படாமையால் அவரின் வேட்புமனு 11

### லெபனானில் இஸ்ரேல் தாக்குதல்

## ஐ.நா. படையில் பணியாற்றிய இலங்கையர்கள் இருவர் காயம்

கொழும்பு, ஒக். 12

இஸ்ரேல் மேற்கொண்ட வான்வழித் தாக்குதலில் லெபனானில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் இடைக் கால அமைதிப் படையினராக பணியாற்றும் இலங்கையர்கள் இருவர் காயமடைந்துள்ளதாக இலங்கை இராணுவம் அறிவித்துள்ளது.

இந்த சம்பவம் இடம்பெற்ற போது இலங்கை இராணுவத்தினர் இருவரும் நகோரா கிராமத்தில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் முகாமில் 11



## தமிழ் அரசு, ஜ. த. தே. கூ. திருமலையில் வேட்புமனு

- பா. விபூஷிதன் -

திருகோணமலை, ஒக். 12

திருகோணமலை மாவட்டத்தில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியும் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியும் ஏற்கனவே அறிவித்தவாறு கூட்டாகப் போட்டியிடுகின்றன.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் சின்னத்தில் போட்டியிடும் இந்தக் கூட்டணி நேற்று வெள்ளிக்கிழமை வேட்புமனுவை தாக்கல் செய்தது.

திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் அரசுக் கட்சி யின் வீட்டு சின்னத்தில் போட்டியிடும் இந்தக் கூட்ட ணியில் இலங்கை தமிழ் அரசுக் 11

## தமிழ் அரசின் அதிருப்தி குழு மாம்பழம் சின்னத்தில் போட்டி!

யாழ்ப்பாணம், ஒக். 12

இலங்கை தமிழ் அரசுக் கட்சியிலிருந்து வெளியேறி சுயேச்சையாக போட்டியிடும் ஜனநாயக தமிழ் அரசு கூட்டமைப்புக்கு மாம்பழம் சின்னம் ஒதுக்கப்பட்டுள்ளது.

சட்டத்தரணி கே. வி. தவராஜா தலைமையிலான இந்தக் குழுவினர் நேற்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். மாவட்ட செயலகத்தில் வேட்புமனுவை தாக்கல் செய்தனர்.

பாராளுமன்றத் தேர்தலில் மாம்பழம் சின்னத்தில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் இந்த சுயேச்சை குழுவில் கே. வி. தவராசா, ஈ.சரவணபவன், பொ. ஐங்கரநேசன், விமலேஸ்வரி சிறிகாந்தரூபன், வை.பாலசுரேஸ், நா.பார்த்தீபன், பு.வசந்தராஜ், த. ஐங்கரன், க.குணாளன் ஆகியோர் களமிறங்குகின்றனர்.

(ஐ)

## வன்னியில் 47 அணிகள் தேர்தல் களத்தில் போட்டி!

- குமார. கோகுலன் -

வவுனியா, ஒக். 12

நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் வன்னித் தேர்தல் மாவட்டத்தில் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் என 47 அணிகள் போட்டியிடவுள்ளன.

வன்னி தேர்தல் மாவட்டத்தில் 24 அரசியல் கட்சிகளும் 27 சுயேச்சை குழுக்களுமாக 51 அணிகள் வேட்பு மனுக்களை தாக்கல் செய்திருந்தன. இதில், 2 அரசியல் கட்சிகள் மற்றும் 2 சுயேச்சைக்குழுக்களின் மனுக்கள் நிராகரிக்கப்பட்டன என்று வவுனியா 11

## வங்காள விரிகுடாவில் உருவாகும் தாழமுக்கம்

### வடக்கு-கிழக்கு மாகாணங்களில் 20 ஆம் திகதி வரை கடும் மழை

யாழ்ப்பாணம், ஒக். 12

நாளை தென் கிழக்கு வங்காள விரிகுடாவில் தாழமுக்கம் ஒன்று உருவாகும் வாய்ப்புள்ளது. இது 15ஆம் திகதி வடக்கு வடமேற்கு திசை நோக்கி நகர்ந்து அதன் பின் 18 ஆம் திகதி அல்லது 19 ஆம் திகதி தமிழ் நாட்டின் வடக்கு பகுதிக்கும் ஆந்திராவின் தெற்கு பகுதிக்கும் இடையில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக கரையைக் கடக்கும் வாய்ப்புள்ளது என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியல் துறை 11

## அமைதிக்கான நோபல் ஜப்பானிய அமைப்புக்கு

ஒஸ்லோ, ஒக். 12

ஜப்பானிய அமைப்பான நிஹோன் ஹிடாங்க்யோவுக்கு அமைதிக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

உலகளவில் மருத்துவம், இயற்பியல், வேதியியல், இலக்கியம், பொருளாதாரம், அமைதி ஆகிய துறைகளில் மகத்தான சாதனை படைப்பவர்களுக்கு ஆண்டுதோறும் நோபல் பரிசு வழங்கப்படுகிறது. 11

## 'மாம்பழ'த்துடன் மாவையை சந்தித்த அதிருப்தி தமிழ் அரசு!

யாழ்ப்பாணம், ஒக். 12

பாராளுமன்றத் தேர்தலில் சுயேச்சை குழுவாக களமிறங்கியுள்ள தமிழ் அரசு அதிருப்தி குழுவினர் நேற்று மாம்பழத்துடன் சென்று மாவை சேனாதிராசாவை சந்தித்து ஆசி பெற்றனர்.

நவம்பர் 14இல் நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் தமிழ் அரசுக் கட்சி அதிருப்தியாளர்கள் ஜனநாயக தமிழ் அரசு கூட்டமைப்பு 11

## ஓமந்தை வாள்வெட்டில் காயமடைந்தவரும் பலி!

- குமார. கோகுலன் -

வவுனியா, ஒக். 12

காணி பிணக்கால் ஓமந்தையில் இடம்பெற்ற வாள் வெட்டில் படுகாயமடைந்த மற்றைய நபரும் நேற்று வெள்ளிக்கிழமை உயிரிழந்தார். இதனால், இந்த சம்பவத்தில் பலியானவர்களின் எண்ணிக்கை இரண்டாக அதிகரித்தது.

வவுனியா - ஓமந்தை - கதிரவேலு பூவரசன் 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

எழுபதுகளில் குடும்பத்தில் ஒரு பிள்ளையை கப்பலில் வேலைக்கு அனுப்பினால் அந்தக் குடும்பம் பொருளாதார ரீதியாக சமூகத்தில் உயர்ந்துவிடும் என்பார்கள். அது, எண்பதுகளில் அகதியாக ஏதாவது ஐரோப்பிய நாட்டுக்குப் போனால் போதும் என்றாகியது. பின்னர் அது கனடா, அவுஸ்திரேலியா என்று வியாபித்து இன்று அப்படி ஏதாவது நாட்டுக்கு எத்தனை கோடியைக் கொடுத்தாவது போய் கரை சேர்ந்தால் காணும் என்றாகிறது.

அதற்காகவே உயிரையும் மதிக்காமல் படகுகளில் அவுஸ்திரேலியாவுக்கு மட்டுமல்ல, கனடாவுக்குக்கூட பயணம் செய்தார்கள் நம்மவர்கள். அதாவது, எந்த அச்சுறுத்தலையும் எதிர்கொண்டாவது புலம்பெயர் தேசமொன்றில் கரை சேர்ந்தால் காணும் என்பதே அவர்களின் இலக்காக இருந்தது. ஆனால், இப்போது புதிய நம்பிக்கை ஒன்று நம்மவர்கள் மத்தியில் துளிர்விட ஆரம்பித்திருக்கின்றது.

அது நல்லதா கெட்டதா என்பதற்கு அப்பால், ஆகக்குறைந்தது, நம்மவர்கள் நாட்டுக்குள்ளேயே இருக்க நினைப்பது நல்லதுதான். இப்படியே நம்மவர்கள் புலம்பெயர்ந்துகொண்டே போனால் கடைசியில் பாவப்பட்ட அப்பாவிகள் - ஒன்றும் இல்லாதவர்கள் மட்டுமே மண்ணில் எஞ்சியிருப்பார்கள் என்ற பயம் இந்த இனத்தை நேசிக்கும் அனைவருக்கும் ஏற்பட்டிருந்தது.

இப்போது அப்படி புலம்பெயரத் தேவையில்லை. ஓர் அரசியல் கட்சியில் சேர்ந்து ஏதேனும் பதவியைப் பெற்றுவிட்டால் காணும் என்று நம்மவர்கள் யோசிக்கத் தலைப்பட்டுவிட்டனரோ என்று அண்மைகால செய்திகளைப் பார்க்கின்றபோது தோன்றுகின்றது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட முக்கிய வேட்பாளர் ஒருவர் மூன்று தினங்களுக்கு மேலாக யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து தனது பிரசாரத்தை நடத்திவிட்டு கொழும்பு திரும்பியிருந்த போது அவருடன் பேசுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது. அப்போது அவர் சொன்னார், "நான் தமிழ் அரசியல்வாதிகளை நினைத்து அனுதாபப்பட வேண்டித்தான் இருக்கின்றது. யாரைச் சந்தித்தாலும் தன்னிடம் இத்தனை ஆயிரம் வாக்குகள் இருக்கின்றன. இத்தனை தந்தால் உங்களுக்கு ஆதரவு வழங்கலாம் என்றுதான் கேட்கிறார்கள்", என்றார்.

அவர் அப்படிச் சொன்ன போது, அவர் சொல்வதில் சில உண்மைகள் இருந்தாலும் அவர் மிகைப்படுத்திச் சொல்கிறார் என்றுதான் நினைத்திருந்தேன்.

ஆனால், அண்மையில் பாராளுமன்ற தேர்தலையொட்டி நடக்கும் சம்பவங்களை அறிகின்ற போது அவர் சொன்னவை உண்மையாகவே இருக்குமோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

புலம்பெயர் கோடீஸ்வரர் ஒருவர் கொழும்பில் ஹோட்டலில் றூம்போட்டு அரசியல்வாதிகளை சந்தித்து 'டீல்' போட்டு வருவது பற்றி சில தினங்களுக்கு முன்னர் எழுதியிருந்தேன். அந்த 'அரசியல் வர்த்தகத்தில்' முதலில் கையை நனைத்தவர் உள்ளூராட்சி சபை ஒன்றின் முன்னாள் தலைவர் என்கின்றன அந்த வர்த்தகருக்கு நெருக்கமான வட்டாரங்கள். அதனால்தான் தமக்கு ஓர் ஆசனம் கிடைத்தால் அது தனக்குத்தான் கிடைக்க வேண்டும் என்பதற்காக தன்னைவிட அதிக விருப்பு வாக்குகள் கிடைக்கக்கூடிய எவரும் வேட்பாளர் பட்டியலில் இடம்பிடித்துவிடக்கூடாது என்பதில் உறுதியாக நின்று அதில் வெற்றியும் பெற்றுவிட்டார் அவர்.

அவர் அவ்வாறு வெற்றிபெறுவதற்கு அவரின் கட்சியின் தலைவரின் ஆசீர்வாதம் கிடைப்பதற்கு முக்கிய காரணம் என்ன என்பதும் இப்போது அரசல்புரசலாக வெளிச்சத்துக்கு வரத் தொடங்கியிருக்கின்றது.

அண்மையில், தாய் - தந்தையர் இல்லாத ஒரு பெண்ணுக்கு 'பார்' லைசன்ஸ் எடுத்துக் கொடுத்து 'பார் போற்றும்' தலைவராக அறியப்பட்ட அந்தத் தலைவருக்கு லைசன்ஸை கொடுத்து சில கோடி ரூபாயை பெறுவதற்கான 'டீலை' செய்துகொடுத்த ஒருவர் பற்றிய விவரங்களை அந்த நபர் முன்னர் இருந்த கட்சிக்காரர்கள் திரட்டி வருகின்றனராம். இதனால் அவர் பற்றிய அந்த விபரங்களை எந்நேரத்திலும் வெளியிட்டு அவரின் 'அரசியல் நேர்மையை' வெளிச்சத்துக்குக் கொண்டுவந்துவிடுவோம் என்கின்றனர் அந்தக் கட்சிக்காரர்கள்.

மேலே வெளிநாடு போனால் தான் பணம் உழைக்கலாம் என்ற நிலைமை மாறிவருவது பற்றி எழுதியிருந்தேன். அது உண்மைதான் என்பதை நிரூபிக்கும் வகையில்தான், இப்போது சம்பவங்கள் நடந்து வருகின்றன. இந்தத் தேர்தலில் பல்வேறு தரப்பினரும் திடீர் திடீரென்று வேட்புமனு தாக்கல் செய்து வருவது பற்றி ஒரு மூத்த ஊடக நண்பரிடம் பேசிக் கொண்டிருந்தேன். அப்போது அவரிடம் கேட்டேன், "இவர்கள் எல்லாம் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கையில்தானே போட்டியிடுகின்றார்கள்.?" என்று.

அதற்கு அவர் சொன்னார், "சில குழுக்கள் அந்த நம்பிக்கையில் போட்டியிடக்கூடும். ஏனெனில், இப்போது பல்வேறு குழுக்களாக போட்டியிடுகின்றபோது, வாக்குகள் சிதறி ஒவ்வொரு குழுவுக்கும் ஒவ்வோர் எம். பி. கிடைக்கலாம். அந்த நம்பிக்கையில் போட்டியிடுபவர்களும் உண்டு. ஆனால் பலர் போட்டியிடுவது, ஒரு தேர்தலில் போட்டியிட்டு சில ஆயிரம் வாக்குகளை பெற்றுவிட்டால் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் என்றாலும் வேட்பாளர்களுடன் பேரம் பேசுகின்றபோது என்னிடம் இத்தனை ஆயிரம் வாக்குகள் இருக்கின்றன என்று பேரம் பேசுவது பயன்தரும் அல்லவா?" என்றார் அவர்.

இப்படியெனில், இந்தத் தேர்தல் பலருக்கு அடுத்த ஐந்து வருடங்களின் பின்னர் பயன்பெறுவதற்கான முதலீடுதான் என்று அவருக்கு சொல்லி வைத்தேன்.

**- ஊர்க்குருவி.**

## சாதாரண தர மாணவர்களுக்கு கற்றல் செயல்முறை கையேடு!

யாழ்ப்பாணம், ஒக். 12

கல்விக்கு கரம் கொடுக்கும் வெண்கரம் அமைப்பால் க. பொ. த சாதாரண தர மாணவர்களுக்கான செயன்முறை கையேடுகள் "முயன்று தவறிக் கற்றல்" எனும் தொனிப் பொருளில் வெண்கரம் அமைப்பின் ஆசிரியர் வளவாளர்களால் தயாரிக்கப்பட்டு பரீட்சை பிரிவினரால் வெளியிடப்பட்டது.

கணிதம், தமிழ், வரலாறு, சமயம் ஆகிய பாடங்களுக்கான இந்தச் செயன்முறைக் கையேடுகள் வலிகாமம், யாழ்ப்பாணம் கல்வி வலயங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு நேற்று வெள்ளிக்கிழமை வழங்கி வைக்கப்பட்டன.

தவணைப் பரீட்சையில் 20 - 40 வரையான புள்ளிகளை பெற்றுக்கொண்ட மாணவர்களின் கற்றல் அடைவு மட்டத்தை அதிகரிக்கும் இலக்குடன் மூன்று மாத கால பயிற்சி நெறியாக இச்செயன்முறைக் கையேடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

செயன்முறைக் கையேடுகளை வழங்கும் நிகழ்வு வெண்கரம் பிரதான செயற்பாட்டாளர்களான இ. சிறீதரன் (அதிபர் ), பங்கிராஸ் (ஓய்வுநிலை அதிபர்), மு. கோமகன், எம். பிரபாகரன், திருமதி சா. ஜீவதரன் (ஆசிரியர்) ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கு வாழ்த்துரை வழங்கி கையேடுகளை கையளித்தனர். (ஐ-05)

## யாழில் ஐக்கிய மக்கள் கூட்டணி வேட்புமனு

யாழ்ப்பாணம், ஒக். 12

நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவை ஐக்கிய மக்கள் சக்தியினர் தாக்கல் செய்தனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தலைமையிலான வேட்பாளர் அணியினர் வேட்பு மனுவைக் கையளித்தனர். (ஐ)

## சிறுகதை வெளியீடு

யாழ்ப்பாணம், ஒக். 12

நியூசிலாந்தில் வசித்து வரும் பொறியியலாளரும் எழுத்தாளருமான ஜோர்ஜ் அருளானந்தம் எழுதிய சிறுகதைத் தொகுப்பு நூலான மண்ணும் மனிதர்களும் இன்று சனிக்கிழமை வெளியிடப்படவுள்ளது.

ஒக்லாந்திலுள்ள திறீ கிங்ஸ், பிக்லிங் மாநாட்டு மைய மண்டபத்தில் மாலை 4.25 மணிக்கு சண் மாஸ்டர் ( வே. சண்முகராஜா) தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் லீனப்பு அருள்தாஸ், ரமேஷ் செல்வகுமார், பிரியா சிறீதரன், மணி நிலவன் அறிவுக்கரசு, இலக்குவன் சொக்கலிங்கம், தமிழினி வாமதேவன், வித்தியா நந்தகுமார், பிரேம்குமார் கந்தசாமி ஆகியோர் உரைகளை நிகழ்த்தவுள்ளனர். (ஐ)

## சந்நிதியான் ஆச்சிரமத்தால் வாழ்வாதார உதவி அளிப்பு!



வடமராட்சி, ஒக். 12

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் கிளிநொச்சியை சேர்ந்த குடும்பம் ஒன்றுக்கு குழாய்க் கிணறு அமைத்துக் கொடுக்கப்பட்டது.

கோணாவில் கிழக்கை சேர்ந்த இரண்டு சிறுநீரகங்களும் பாதிக்கப்பட்ட குடும்பம் ஒன்றுக்கு வாழ்வாதார உதவியாக 2 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் செலவில் நேற்றுமுன்தினம் இந்தக் குழாய்க்கிணறு அமைத்துக் கொடுக்கப்பட்டது.

இந்த உதவித் திட்டத்தினை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தலைமையிலான தொண்டர்கள் நேரடியாகச் சென்று வழங்கி வைத்தனர். (ஐ-02)

## தமிழ் மக்கள் கூட்டணியின் அதிருப்தி குழுவும் வேட்புமனு



யாழ்ப்பாணம், ஒக். 12

தமிழ் மக்கள் கூட்டணியின் அதிருப்திக் குழுவினர் யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய முன்னாள் தலைவர் கி. கிருஷ்ணமீனன் தலைமையில் நேற்றைய தினம் வேட்புமனு தாக்கல் செய்தனர்.

தமிழ் மக்கள் கூட்டமைப்பு என்ற பெயரில் கரும்பலகை சின்னத்தில் இளைஞர்கள் அணி தேர்தலில் களமிறங்கியுள்ளது.

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் வழிபட்ட பின்னர் யாழ். மாவட்ட செயலகத்தில் இந்தக் குழுவினர் நேற்று வெள்ளிக்கிழமை காலை வேட்புமனுவை தாக்கல் செய்தனர்.

இந்த சின்னத்தில், இ. சரவணன், ச. ஸ்ரார்லின், ம. தர்சிதன், ச. பாலமனோகரி, லோ. விஜிதன், த. தவநேசன், இ. பாலகணேசன், ஜெ. ஆர்நிகன் ஆகியோர் போட்டியிடுகின்றனர். (ஐ)

## ஜனநாயக தேசிய கூட்டணியில் போட்டியிடும் அங்கஜன் அணி!

யாழ்ப்பாணம், ஒக். 12

எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் தபால் பெட்டிச் சின்னத்தில் ஜனநாயக தேசிய கூட்டணியில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் நேற்று காலை யாழ். மாவட்ட செயலகத்தில் கையளித்தார்.

கடந்த காலங்களில் அங்கஜன் இராமநாதன் பிரதிநிதித்துவப்படுத்தி தேர்தலில் களமிறங்கிய சிறிலங்கா சுதந்திரக் கட்சி தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் உள்ள காரணத்தால் அந்தக் கட்சியின் பெயரையோ அல்லது சின்னத்தையோ பயன்படுத்தி போட்டியிட முடியாத சூழ்நிலை காணப்படுகிறது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் கடந்த தேர்தலில் சுதந்திரக் கட்சியில் போட்டியிட்டு யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் அதிகூடிய விருப்பு வாக்கை பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
12.10.2024 சனிக்கிழமை
பிலவ வருடம், புரட்டாதி 26

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தமிழ் பிரதிநிதித்துவம்

ஒரு காலத்தில் பல ஆயுத விடுதலை இயக்கங்கள் தோற்றம் பெற்றன. ஆங்கில எழுத்துகளை முன்னாலும் பின்னாலும் போட்டுவிட்டால் அவைகள் எல்லாம் இயக்கங்கள் என்று நகைச்சுவையாகப் பேசுமளவுக்கு இயக்கங்களின் எண்ணிக்கை மேலோங்கியிருந்தது. பின்னர், அனைத்தும் உதிர்ந்து ஐந்து பிரதான இயக்கங்களே நிலைபெற்றன. அவையும்போய் விடுதலைப் புலிகள் இயக்கம் மட்டுமே இறுதிவரையில் போராட்டத்தை முன்னெடுத்தது. அதுவும் போனது.

இன்று அந்த இடத்தை ஜனநாயகம் பேசும் நபர்கள் கையிலெடுத்திருக்கின்றனர். 2010இல், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டுமே இருந்தது. கூட்டமைப்பிலிருந்து கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் ஆசனப் பங்கீடு தொடர்பான பிரச்னையில் வெளியேறியது. ஒன்று இரண்டானது. பின்னர் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி வெளியேறிது. இடைப்பட்ட காலத்தில் ஆனந்தசங்கரி தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணி உள்ளுக்குள் இருக்கின்றதா அல்லது வெளியில் இருக்கின்றதா என்பது தெரியாதளவுக்கு நிலைமைகள் இருந்தன.

கூட்டமைப்பில் அரசியலை ஆரம்பித்த விக்னேஸ்வரன் பின்னர் ஒரு கட்சியாக முகம் காட்டினார். ரெலோவிலிருந்து சிறீகாந்தா அணியொன்று தெரிந்தது. அனந்தி சசிதரன் இன்னொரு கட்சியென்றார். மணவண்ணனும் இன்னொரு கட்சியென்றார். இது போதாதென்று இப்போது ஜனநாயக தமிழ் அரசுக் கட்சியென்று இன்னோர் அணி உருவாகியிருக்கின்றது. அடுத்த மாகாண சபைக்கு விக்னேஸ்வரனின் பக்கத்திலிருந்தும் இன்னோர் அணி வரலாம். தமிழ் அரசு முற்றிலுமாக சுமந்திரனிடம் சென்றால் சிறீதரனும் இன்னோர் அணியை ஆரம்பிக்கலாம். ஆரம்பகாலத்து இயக்கங்களை நினைவுபடுத்துவதுபோல் கட்சிகள் உருவாகின்றன. ஆனால், இவ்வாறு தங்களை கட்சியாக்கிக் கொண்டிருப்பவர்களை சற்று உற்றுப் பார்த்தால், அவர்களிடம் ஆகக்குறைந்தது மூன்று பேர்கூட இருக்காது. மூன்று பேரைக் கொண்டு கட்சி ஆரம்பிக்க முடியுமென்றால் வடக்கு, கிழக்கில் எத்தனை கட்சிகளை உருவாக்க முடியும்?

இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் வடக்கு, கிழக்கில் தமிழ் பிரதிநிதித்துவம் ஊசலாடிக் கொண்டிருக்கின்றது. யாழ்ப்பாணத்தில் ஆறு ஆசனங்களில் ஒன்றைக் கைப்பற்ற எத்தனை கட்சிகள் போட்டியிடுகின்றன? இவர்கள் சாதிக்கப் போவது என்ன என்பதற்கான பதில் அவர்களிடமாவது இருக்கின்றதா என்பதுதான் கேள்வி?

பல இயக்கங்கள் தோன்றி இறுதியில் சிலவாகி, ஒன்றாகி இறுதியில் தமிழ் மக்களுக்கென்று எதுவும் இல்லாது போனதுபோல், தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகள் தங்களுக்குள் பிளவுற்று - மோதி இறுதியில் தமிழ் மக்களுக்கு எதைப் பெற்றுக் கொடுக்கப் போகின்றன? தமிழ்ப் பிரதிநிதித்துவங்கள் தொடர்ந்தும் பலவீனமடைந்து செல்லும். தமிழ்ப் பிரதிநிதித்துவங்களே தமிழ்த் தேசிய அரசியலின் ஒரே பலமாகும். இந்தப் பலத்தையும் இழந்துபோனால் தமிழர் அரசியல் என்பது வெறும் சொல்லாகவே மிஞ்சிப் போகும் ஆபத்து நேரிடும்.

ஆனால். இந்தத் தேர்தல் முடிவுகள் பல கட்சிகளுக்கும் பாடங்களை புகட்டவுள்ளது. வரலாறு முழுவதும் தமிழர் அரசியல் தரப்புகளுக்கு போதிய பாடங்கள் கிடைத்தபோதிலும்கூட எதனையும் கற்றுகொள்ள மாட்டோம் என்பதில் தமிழ்த் தேசியம் பேசும் அரசியல்வாதிகள் உறுதியாக இருக்கின்றனரா?




பிரசித்தி பெற்ற யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலய பெருந்திருவிழாவில் தேர்த் திருவிழா நேற்று வெள்ளிக்கிழமை பக்திபூர்வமாக நடைபெற்ற போது...!
(படங்கள் - ஐ. சிவசாந்தன்)

## கருத்தரங்கும் நூல் வெளியீடும்

*யாழ்ப்பாணம், ஒக். 12*

கல்வி அபிவிருத்தி குழுமம் நடத்தும் முன்பள்ளி துறைசார் விழிப்புணர்வு கருத்தரங்கும் 21ஆம் நூற்றாண்டு முன்பள்ளி செல்நெறிகள் நூல் வெளியீடும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நடைபெறவுள்ளது.

கல்வி அபிவிருத்திக் குழுமத்தின் தலைவர் ம. சூரியசேகரம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வட மாகாண பிரதம செயலாளர் இ. இளங்கோவன், சிறப்பு விருந்தினராக வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ம. பற்றிக் டிரஞ்சன், கௌரவ விருந்தினராக வடக்கு மாகாண கல்வி பணிப்பாளர் க. பிரட்லி ஜெனட் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

## குடியிருப்பதற்கு காணி வேண்டும்; செட்டிக்குளம் மக்கள் ஆர்ப்பாட்டம்



*வவுனியா, ஒக். 12*

வவுனியா, செட்டிக்குளம், மெனிக்பாம் பிரதேச மக்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

செட்டிக்குளம், மெனிக்பாம் பிரதேசத்தில் குடியமர்த்தப்பட்டு நீண்டகாலமாக வசித்துவரும் உப குடும்பங்களே இவ் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இப் பிரதேசத்தில் வாழும் 70 இற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு குடியிருப்பதற்கான காணி வேண்டும் என கோரியே இவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சுமார் 8 வருடங்களுக்கு மேலாக உறவினர்கள் வீடுகளில் வசித்து வரும் இவர்களுக்கு காணி தருவதற்கான இடம் ஒதுக்கப்பட்டுள்ள போதும் இதுவரை வழங்கப்படவில்லை என இவர்கள் குற்றம் சாட்டுகின்றனர். (அ)

## தேசிய மக்கள் சக்தியினர் வன்னியில் நேற்று வேட்புமனு!

*வவுனியா, ஒக். 12*

நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்த லில் வன்னி தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவை தேசிய மக்கள் சக்தி நேற்று தாக்கல் செய்தது.

நவம்பர் 14ஆம் திகதி பாராளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது. இதில், ஜனாதிபதி அநுரகுமார தலைமையிலான தேசிய மக்கள் சக்தி திசைகாட்டி சின்னத்தில் போட்டியிடுகிறது.

இந்த நிலையில், நேற்று வெள்ளிக்கிழமை வன்னி தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவை வவுனியா மாவட்ட செயலகத்தில் சமர்ப்பித்தது.

வன்னிமாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தியின் சார்பில் உபாலிசமரசிங்க, செல்வத் தம்பி திலகநாதன், மயில்வாகனம் ஜெகதீஷ்வரன், பாத்திமா அயிஸ்த்தா, பிரேமரத்தின, ஜோகராஜா சிவரூபன், அன்டன் கலை, அபுபாகீர் பிரைஸ்தீன், இராதாகிருஷ்ணன், ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

(ஐ - 10)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒக்ரோபர் - 12 சனிக்கிழமை
குரோதி வருடம் - புரட்டாதி 26
நல்ல நேரம் : 07.31 - 09.00
ராகு காலம் : 09.00 - 13.30
திதி : தசமி




**மேடம்**
சாதிக்க வேண்டுமென்ற எண்ணம் வரும். நண்பர்களால் அனுகூலம் உண்டு. வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். அலுவலகத்தில் மரியாதை கூடும். முயற்சியால் முன்னேறும் நாள்.

**இடபம்**
சோர்வு நீங்கி துடிப்புடன் செயல்பட தொடங்குவீர்கள். வியாபாரத்தில் சில வேலைகளை விட்டுக் கொடுத்து முடிப்பீர்கள். உத்தியோகத்தில் புது வாய்ப்புகள் வரும். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**மிதுனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாமலேயே ஒருவித படபடப்பு தாழ்வுமனப்பான்மை வந்து செல்லும். அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம். விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டிய நாள்.

**கடகம்**
எதையும் தன்னம்பிக்கையுடன் செய்யத் தொடங்குவீர்கள். வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். பெரிய பொறுப்புகளை ஏற்பீர்கள். நட்பால் ஆதாயம் அடையும் நாள்.

**சிம்மம்**
குடும்பத்தினருடன் சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். வியாபாரத்தில் ரெட்டிப்பு லாபம் உண்டு. உத்தியோகத்தில் தலைமைக்கு நெருக்கமாவீர்கள்.

**கன்னி**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். கனவு நனவாகும் நாள்.

**துலாம்**
முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். வியாபாரத்தில் அதிரடி சலுகைகள் மூலம் லாபமடைவீர்கள். உத்தியோகத்தில் விமர்சனங்களையும் தாண்டி முன்னேறுவீர்கள். உழைப்பால் உயரும் நாள்.

**விருட்சிகம்**
குடும்பத்தினருடன் மனம் விட்டு பேசி மகிழ்வீர்கள். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். உத்தியோகத்தில் அதிகாரிகள் உங்களுக்கு முக்கியத்துவம் தருவார்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

**தனுசு**
கணவன் - மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். வியாபாரத்தில் எதிர்பாராத லாபம் உண்டு. பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**மகரம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் எந்த இடத்தில் தொட்டாலும் இரண்டு மூன்று முறை முயன்று முடிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். இடம், பொருள், ஏவல் அறிந்து செயல்பட வேண்டும்.

**கும்பம்**
கணவன் - மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். வியாபாரத்தில் போட்டிகளை சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் வந்து நீங்கும். போராடி வெல்லும் நாள்.

**மீனம்**
குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். காணாமல் போன முக்கிய ஆவணங்கள் கிடைக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளுக்கு ஆலோசனை தருவீர்கள். புகழ் கௌரவம் கூடும் நாள்.

# ஜனாதிபதியின் நல்லெண்ணத்தை இந்திய மீனவர்கள் மீறுகின்றனர்!

## சம்மேளன தலைவர் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஒக். 12

**ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க பதவியேற்ற நிலையில் நல்லெண்ண அடிப்படையில் இந்திய மீனவர்கள் விடுவிக்கப்பட்ட போதும் இந்திய மீனவர்களின் அத்துமீறல் தொடர்ந்து இடம்பெறுவதாக யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சம்மேளனத் தலைவர் அ. மரியதாஸ் குற்றஞ்சாட்டியுள்ளார்.**

யாழ். கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். மாவட்ட மீனவர்களுக்கு மண்ணெண்ணெய் மானியத்தை வழங்கியமைக்காக ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

மீனவர்களுக்காக கடந்த ஆட்சியில் கடற்றொழில் அமைச்சராக இருந்த டக்ளஸ் தேவானந்தா மண்ணெண்ணெய் மானியத்தை பெற்றுக் கொடுப்பதற்காக அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்றினார் அவருக்கும் எமது நன்றிகள்.

மேலும், புதிய ஜனாதிபதி அநுர பதவிக்கு வந்த பிறகு நல்லெண்ண அடிப்படையில் இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இந்திய மீனவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

ஜனாதிபதியின் நல்லெண்ண செயல்பாட்டை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் புதன்கிழமை மாதகல் கடற்பரப்பில் எல்லை தாண்டிய இந்திய மீனவர்கள் எமது மீனவர்களின் பெறுமதி மிக்க வலைகளை அறுத்து நாசம் செய்தனர்.

ஆகவே, இந்த செயல்பாட்டை நாங்கள் வன்மையாக கண்டிப்பதோடு ஜனாதிபதியிடம் ஒரு கோரிக்கையை முன்வைக்கிறோம். அத்துமீறிய தொழில் நடவடிக்கையில் ஈடுபடும் இந்திய மீனவர்களை தொடர்ச்சியாக கைது செய்து சிறையில் அடைக்க வேண்டும்-என்றார்.

(எ-05)

# தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்புமனு தாக்கல் செய்தது

## விசேட தேவையுடைய பெண்ணும் உள்ளடக்கம்

வவுனியா, ஒக்.12

வன்னித் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவை தமிழர் விடுதலைக் கூட்டணி நேற்று தாக்கல் செய்தது.

எதிர்வரும் நவம்பர் மாதம் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் ஆனந்தசங்கரி தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணி உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடுகின்றது.

இந்த நிலையில், வவுனியா மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள தேர்தல் காரியாலத்தில் வேட்புமனுவை தாக்கல் செய்தது.



வன்னி மாவட்டத்தில் குறித்த கூட்டணியானது சமூக ஆர்வலர் சந்திரகுமார் கண்ணனை முதன்மை வேட்பாளராக கொண்டு போட்டியிடுவதுடன், விசேட தேவையுடைய பெண் ஒருவரும் போட்டியிடுகிறார்.

(எ)



# காதர் மஸ்தான் வேட்புமனு தாக்கல்

வவுனியா, ஒக். 12

வன்னி மாவட்டத்தில் பாராளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுவை முன்னாள் இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் தாக்கல் செய்தார்.

பாராளுமன்ற தேர்தலில் காதர் மஸ்தான் இலங்கை தொழிலாளர் கட்சியின் கங்காரு சின்னத்தில் போட்டியிடுகின்றார்.

இந்த நிலையில் வவுனியா மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள தேர்தல் காரியாலத்தில் நேற்றுக் காலை வேட்புமனுவை தாக்கல் செய்தார்.

இதன்போது கட்சியின் முக்கியத்தர்களும் வருகை தந்தனர்.

(எ)

# "11 ஆசனங்களை கைப்பற்றுவோம்"

வவுனியா, ஒக்.12

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி 11 ஆசனங்களை கைப்பற்றும் என்று அந்தக் கூட்டணியின் வேட்பாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

வன்னித் தேர்தல் மாவட்டத்துக்கான வேட்புமனுவை தாக்கல் செய்துவிட்டு ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

வன்னியில் எமது அணி சார்பில் போட்டியிடும் அத்தனை பேரும் விடுதலைக்காக போராடியவர்கள். அந்த விடுதலையை அகிம்சை வழியில் பெறுவதற்காக நாங்கள் இன்று தேர்தலில் போட்டியிடுகிறோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாகரிகமற்ற அரசியல் கலாசாரத்தை புறந்தள்ளி ஒன்றிணையவேண்டும்!

## சஜித் பிரேமதாஸ அழைப்பு

கொழும்பு, ஒக். 12

**நாகரிகமற்ற அரசியல் கலாசாரத்தை புறந்தள்ளிவிட்டு சகோதரத்துவத்துடன் ஒருநிலைப்பட்டு செயற்படவேண்டும் என ஐக்கிய மக்கள் கூட்டணியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**



அவர் மேலும் தெரிவிக்கையில்-

இதுவரை இருந்து வந்த நாகரிகமற்ற அரசியல் கலாசாரத்தை புறந்தள்ளிவிட்டு சகோதரத்துவத்துடனும் ஒருநிலைப்பட்டும் செயற்படுவோம். 2028 இற்குள் கடனை திருப்பிச் செலுத்த வேண்டும் என்பதால், சுருங்கிப்போயுள்ள பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டும். இது அனைவரினதும் பொறுப்பு என்பதனால், 220 இலட்சம் மக்களும் ஒன்றாய் இதற்காக உழைக்க வேண்டும். இதற்குத் தேவையான தலைமைத்துவத்தை வழங்குவதற்கு நாம் தயாராகவுள்ளோம்.

வேட்பாளர் தெரிவில் கடும் போட்டி காணப்பட்டது. பெண்களுக்கும் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் 25 வீத இடஒதுக்கீடு வழங்கப்பட்டு, அதிகளவான பெண் பிரதிநிதித்துவத்தை பெற்றுத் தருவோம்- என்றார்.

(அ)

# ஜனாதிபதியின் புகைப்படங்களை வெளியிட அனுமதி பெறவேண்டும்

## அரச நிறுவனங்களுக்கு அறிவிப்பு

கொழும்பு, ஒக். 12

நிகழ்வுகளின் பெயர்ப் பலகைகள் மற்றும் விசேட நினைவு சஞ்சிகைகளுக்கு ஜனாதிபதியின் படங்கள் மற்றும் வாழ்த்துச் செய்திகளை வெளியிடுவதற்கு முன்னர் அனுமதி பெற வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி செயலகத்தின் எழுத்துமூல அனுமதியை முன்கூட்டியே பெறவேண்டியது அவசியமாகும் என ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க தெரிவித்துள்ளார்.

அரச நிதியைப் பெற்று முன்னெடுக்கப்படும் பணிகளை ஏற்பாடு செய்யும்போது, அரசாங்கத்தின் கொள்கை மற்றும் தொலைநோக்குப் பார்வைக்கு அமைவாகச் செயற்படுவது அவசியமானது எனவும் அரச நிறுவனங்களை அவர் அறிவுறுத்தியுள்ளார்.

அனைத்து அமைச்சின் செயலாளர்கள், அனைத்து மாகாண பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், அரச கூட்டுத்தாபனச் சபைகள் உள்ளிட்ட சட்டப்பூர்வ நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் அரசிற்குச் சொந்தமான நிறுவனங்களின் தலைவர்களுக்கு ஜனாதிபதி செயலாளர் இந்த அறிவித்தலை வழங்கியுள்ளார். (அ)

# பலத்த மழைக்கு சாத்தியம்!

කාලගුණ විද්‍යා දෙපාර්තමේන්තුව
வளிமண்டலவியல் திணைக்களம்
DEPARTMENT OF METEOROLOGY
ශ්‍රී ලංකාව இலங்கை SRI LANKA

கொழும்பு, ஒக். 12

நாட்டைச் சூழவுள்ள பகுதிகளில் ஏற்பட்ட வளிமண்டலத் தளம்பல் நிலை காரணமாக தற்போது நிலவும் மழையுடனான வானிலை நேற்று முதல் அதிகரிக்கக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் பலத்த மழை பெய்யக்கூடும் எனவும், ஏனைய பகுதிகளில் மாலை அல்லது இரவு வேளையில் மழை அல்லது இடியுடன் கூடிய மழைக்கான சாத்தியம் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைத்துக் கொள்ளப் போதுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளது.

(அ)

# எல்பிட்டி பிரதேச சபைத் தேர்தலில் வாக்களிக்க வாக்காளர்களுக்கு உரிய விடுமுறையை வழங்குக!

## தேர்தல் ஆணைக்குழு கோரிக்கை

கொழும்பு, ஒக். 12

எல்பிட்டிய பிரதேச சபை தேர்தலில் வாக்களிப்பதற்கு உரிய விடுமுறையை வாக்காளர்களுக்கு வழங்குமாறு தொழில் வழங்குநர்களிடம் தேர்தல் ஆணைக்குழு கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் சிறீ ரத்நாயக்கவால் அறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளது.

உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 84 அ(01) ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய தமது வாக்கை அளிப்பதற்காக தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு விடுமுறை வழங்க தொழில்தருநர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதற்கமைய கடமை நிலையத்திலிருந்து வாக்கெடுப்பு நிலையத்துக்கு செல்லும் தூரத்தின் அடிப்படையில் விடுமுறை வழங்குமாறு கோரப்பட்டுள்ளது. அதனடிப்படையில் 40 கிலோ மீற்றர் அல்லது அதற்கு குறைவான தூரமாயின் அரை நாள் விடுமுறையும் 40 முதல் 100 கிலோ மீற்றருக்கு இடைப்பட்ட தூரம் எனின் ஒரு நாள் விடுமுறையும் வழங்கப்பட வேண்டும்.

மேலும், 100 முதல் 150 கிலோ மீற்றர் தூரமாயின் ஒன்றரை நாள் விடுமுறையும் 150 கிலோ மீற்றருக்கு அதிகமாயின் இரண்டு நாள் விடுமுறையும் வழங்கப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எல்பிட்டிய பிரதேச சபைக்கான தேர்தல் இம்மாதம் 26 ஆம் திகதி இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# வெள்ளத்தில் மூழ்கிய ஹைலெவல் வீதி!

கொழும்பு, ஒக். 12

தற்போது நிலவும் அதிக மழையுடனான வானிலை காரணமாக கொழும்பு அவிசாவளை ஹைலெவல் வீதி எஸ்வத்த சந்தியிலிருந்து ஹிங்குரல சந்தி வரையான பகுதி வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாகவும், இதனால் அந்த வீதியில் போக்குவரத்து தடைப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை நேற்று காலை 6.00 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணிநேரத்தில் களுத்துறை மாவட்டத்தின் ஹொரணை பிரதேசத்தில் அதிகூடிய மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறித்த பகுதியில் 239 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

எல்பிட்டியில் 194.75 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சியும், புலத்சிங்கள மில்லி மீற்றர் மழைவீழ்ச்சியும், மத்துகம 186.5 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், சீதாவக்க பிரதேசத்தில் 184.5 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் பதிவாகியுள்ளது. (அ)

# வெள்ளத்தில் மூழ்கிய தெற்கு அதிவேக வீதி!

கொழும்பு, ஒக். 12

தொடர்ச்சியாக பெய்துவரும் மழையினால் ஏற்பட்டுள்ள வெள்ளம் காரணமாக, தெற்கு அதிவேக வீதியின் வெலிபென்ன இடைத்தங்கல் பகுதி முற்றாக நீரில் மூழ்கியுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதனால் காலி மற்றும் கொழும்பிலிருந்து தெற்கு அதிவேக வீதியூடாகப் பயணிக்கும் வாகனங்கள் வெலிப்பென்ன பகுதியில் வெளியேற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் வெலிபென்ன இடைத்தங்கல் பகுதி தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# பங்களாதேஷ் தூதுவர் அநுரவைச் சந்தித்தார்

கொழும்பு, ஒக். 12

பங்களாதேஷ் இடைக்கால அரசாங்கத்தின் தலைவரான முஹம்மத் யூனுஸின் வாழ்த்துச் செய்தியை பங்களாதேஷ் தூதுவர் ஜனாதிபதியிடம் கையளித்தார்.

பங்களாதேஷில் இலங்கையின் முதலீடு மற்றும் அங்கு பணிபுரியும் பெருமளவான இலங்கை பணியாளர்கள் குறித்தும் இந்த சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்டது.

இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார உறவுகளை மேலும் வலுப்படுத்த வேண்டியதன் முக்கியத்துவம் குறித்தும் இங்கு வலியுறுத்தப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன், வர்த்தக மற்றும் பொருளாதார உறவுகளை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ள இலங்கைக்கும் பங்களாதேஷ்கும் இடையில் தற்போதுள்ள முன்னுரிமை வர்த்தக ஒப்பந்தத்தை வலுப்படுத்த நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி மற்றும் தூதுவர் ஆகியோர் இந்த கலந்துரையாடலில் உறுதியளித்தனர்.

இரு நாடுகளுக்கும் இடையிலான நெருங்கிய இருதரப்பு உறவுகளை மேலும் மேம்படுத்துவது மற்றும் பல்வேறு துறைகளில் இரு நாடுகளுக்கு இடையிலான ஒத்துழைப்பை விரிவுபடுத்துவது குறித்தும் இந்த சந்திப்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டது. (அ)

# ஷானி அபேசேகர மீண்டும் பொலிஸ் சேவையில் இணைவு

கொழும்பு, ஒக். 12

முன்னாள் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஷானி அபேசேகரவை மீண்டும் பொலிஸ் சேவைக்கு ஒப்பந்த அடிப்படையில் நியமிக்க பொலிஸ் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

இது நேற்று முன்தினம் முதல் ஒரு வருட காலத்துக்கு அமுலுக்கு வந்துள்ளது.

இலங்கையில் பல சர்ச்சைக்குரிய குற்றங்களுக்குப் பொறுப்பாக இருந்த விசாரணை அதிகாரியாக ஷானி அபேசேகர அறியப்படுகிறார்.

பிரபல துப்பறியும் நபரான இவர், குற்றப் புலனாய்வுத் துறையின் பணிப்பாளராகவும் சேவையாற்றியவர்.

ரக்பி வீரர் வசீம் தாஜுதீன் கொலை, கொழும்பை சுற்றி 11 இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டமை, பரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர படுகொலை, ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க படுகொலை, ரத்துபஸ்வல துப்பாக்கிச் சூடு போன்ற விசாரணைகள் ஷானி அபேசேகரவின் மேற்பார்வையில் இடம்பெற்றன.

அந்த சம்பவங்களுக்கு மேலதிகமாக, ஷானி அபேசேகர, ரோயல் பார்க் கொலை, அங்குலான இரட்டைக் கொலை, உடதலவின்ன கொலை, மொஹமட் சியாம் கொலை போன்ற பல சர்ச்சைக்குரிய கொலைகளின் விசாரணையில் ஈடுபட்ட அதிகாரியாகவும் அறியப்படுகிறார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்த, சமல், பஸில், நாமல் இம்முறை தேர்தலில் இல்லை!

கொழும்பு, ஒக். 12

**எதிர்வரும் பொதுத்தேர்தலில் சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தலைவர் மகிந்த ராஜபக்ஷ போட்டியிட மாட்டார் என தெரியவருகின்றது.**

அத்துடன், அக்கட்சியின் தேசிய அமைப்பாளர் முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷவும் களமிறங்கவில்லை என தெரிய வருகின்றது. நாமல் ராஜபக்ஷ வின் பெயர் தேசிய பட்டியலுக் குள் உள்வாங்கப்பட்டுள்ளது.

ராஜபக்ஷ குடும்பத்தின் மூத்த உறுப்பினரான முன்னாள் அமைச்சர் சமல் ராஜபக்ஷவும் இம்முறை தேர்தலில் போட்டி யிடவில்லை.

ஜனாதிபதித் தேர்தல் முடிந்த பின்னர் அமெரிக்கா பறந்த பஸில் ராஜபக்ஷவும், தேர்தலை வழிநடத்த நாடு திரும்பமாட் டார். முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் அரசியலில் இருந்து ஒதுங்கி இருக்கின்றார்.

எனினும், ராஜபக்ஷ குடும்பத் தில் ஷசீந்திர ராஜபக்ஷ மொன ராகலை மாவட்டத்திலும், நிபுன ரணவக்க மாத்தறை மாவட்டத் திலும் போட்டியிடுகின்றனர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# ஹொரணையில் அதிகூடிய மழை

කාලගුණ විද්‍යා දෙපාර්තමේන්තුව
வளிமண்டலவியல் திணைக்களம்
DEPARTMENT OF METEOROLOGY
ශ්‍රී ලංකාව இலங்கை SRI LANKA

கொழும்பு, ஒக். 12

நேற்றுக் காலை 6.00 மணியு டன் நிறைவடைந்த கடந்த 24 மணிநேரத்தில் களுத்துறை மாவட்டத்தின் ஹொரணை பிரதேசத்தில் அதிகூடிய மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

அதன்படி, குறித்த பகுதியில் 239 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாக வளிமண்ட லவியல் திணைக்களம் தெரிவித் துள்ளது.

அதேபோல், எல்பிட்டியில் 194.75 மி.மீ, புலத்சிங்கள 187 மி.மீ, மத்துகம 186.5 மி.மீ மற் றும் சீதாவக்க பிரதேசத்தில் 184.5 மி.மீ மழைவீழ்ச்சியும் பதிவாகியுள்ளது. (அ)




# 2 பஸ்கள் மோதி விபத்து; 18 பேர் விபத்தில் காயம்!

கொழும்பு, ஒக். 12

கொழும்பு-கண்டி பிரதான வீதியின் உதுவன்கந்த வலகட யாவ பிரதேசத்தில் நேற்று காலை இரண்டு பஸ்கள் ஒன்று டன் ஒன்று மோதி விபத்துக் குள்ளாகியுள்ளன. இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந் தமான இரண்டு பஸ்களே ஒன் றுடன் ஒன்று மோதி விபத்துக் குள்ளான.

விபத்தில் காயமடைந்த சுமார் 18 பேர் கேகாலை மற்றும் மாவனெல்ல வைத்தியசாலைக ளில் அனுமதிக்கப்பட்டுள்ள தாக கேகாலை பொலிஸார் தெரிவித்தனர். பாணந்துறை யில் இருந்து கண்டி நோக்கி பயணித்த பஸ் ஒன்று, கேகாலை யில் இருந்து மாவனல்லை நோக்கி பயணித்த பஸ்ஸின் பின் பகுதியில் மோதி விபத்துக்குள் ளானது. பாணந்துறையில் இருந்து வந்த பஸ்ஸில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு கார ணமாக சாரதிக்கு பஸ்ஸை கட் டுப்படுத்த முடியாமல் விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் சந்தேகிக்கின்றனர். (அ)

# அரச வாகனங்கள் துஷ்பிரயோகம் தகவல்கள் வழங்க விசேட இலக்கம்

கொழும்பு, ஒக். 12

அரசாங்கத்திற்குச் சொந்த மான வாகனங்களை துஷ்பிர யோகம் செய்வது தொடர்பில் எந்தவொரு தகவலையும் வழங் குவதற்கு விசேட இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, '1997' என்ற விசேட தொலைபேசி இலக்கத் துடன் தொடர்பு கொண்டு பொது மக்கள் இது தொடர் பில் முறையிடலாம்.

இந்த துரித இலக்கம் 24 மணி நேரமும் சேவையில் இருக்கும்.

மேலும் தகவல் அளிப்பவர்க ளின் அடையாளங்கள் இரகசி யமாக பேணப்படும்.

எவ்வாறாயினும், தவறான தகவல்களை வழங்குபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

எனவே, சரியான தகவல் களை மட்டுமே வழங்கவேண் டும் என்று பொலிஸார் வலியு றுத்தியுள்ளனர்.

அரசினால் பல்வேறு உத்தி யோகபூர்வ நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட வாகனங்கள் தொடர்பான தகவல்கள் ஏதே னும் குறிப்பிட்ட இடங்களில் சட்டவிரோதமாக மறைத்து வைக்கப்பட்டிருந்தாலோ அல் லது சில இடங்களில் நிறுத்தி பாழடைந்து விடப்பட்டிருந் தாலோ அது தொடர்பான தகவல்களை தெரிவிக்குமாறு பொலிஸ் தலைமையகம் கேட் டுக் கொண்டுள்ளது. (அ)

# தொழில்நுட்பக் கோளாறினால் மீண்டும் நாடு திரும்பிய சிறி லங்கன் எயார்லைன்ஸ்!

கொழும்பு, ஒக். 12

கொழும்பில் இருந்து ரியாத் நோக்கி புறப்பட்ட யு.எல் 265 என்ற சிறிலங்கன் எயார்லைன்ஸ் விமானம், நடுவானில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறினால் முன்னெச்சரிக்கையாக மீண்டும் கொழும்புக்கு திரும்பியுள்ளது.

நேற்று முன் தினம் மாலை 7.00 மணியளவில் விமானம் எந்த அசம்பாவிதமும் நேற்று பாதுகாப்பாக கட்டுநாயக்க, விமான நிலையத்தில் தரையி றங்கியதாக சிறிலங்கன் எயார் லைன்ஸ் தெரிவித்துள்ளது.

இதன் பின்னர், அனைத்து பயணிகளுக்கும் ஹோட்டல் தங்குமிட வசதி செய்யப்பட்ட துடன் அடுத்த விமானத்திற் கான ஆசனங்கள் மீண்டும் முன் பதிவு செய்யப்பட்டதாகவும் சிறிலங்கன் எயார்லைன்ஸ் கூறி யது. (அ)

# மியன்மாரில் சிக்கி தவிக்கும் இலங்கையரை மீட்க உதவுக!

## தாய்லாந்து அரசிடம் இலங்கை கோரிக்கை

கொழும்பு, ஒக். 12

மியன்மாரின் மியாவாடி பிராந்தியத்தில் சைபர் கிரைம் முகாம்களில் இன்னும் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை யர்களை மீட்பதற்கு தாய்லாந்து அரசாங்கத்தின் உதவியை பிரத மர் ஹரிணி அமரசூரிய கோரி யுள்ளார்.

பிரதமர் அலுவலகத்தின் படி, பிரதமர் அமரசூரிய தாய் லாந்து அரசாங்கத்தின் உதவி யைக் கோரியமைக்கமைய, மீட்புப் பணிகளுக்கு மியான்மர் அரசாங்கம் மற்றும் சர்வதேச குடியேற்ற அமைப்பு உதவ முன் வந்துள்ளது.

தாய்லாந்து தூதுவர் பைட் டுன் மஹாபன்னபோர்னுடன் பிரதமர் அலுவலகத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற கலந் துரையாடலின் போதே பிரத மர் ஹரினி அமரசூரிய இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

சைபர் கிரைம் முகாம்களில் இருந்து 28 இலங்கையர்களை மீட்பதில் தாய்லாந்து அரசாங் கம் வழங்கிய உதவிக்கு நன்றி தெரிவித்த அவர், சைபர் கிரைம் முகாம்களில் இன்னும் தடுத்து வைக்கப்பட்டுள்ள 40 இலங்கை யர்களை மீட்க தொடர்ந்து ஆத ரவை கோரினார்.

பிரதமருக்கு தனது வாழ்த்துகளைத் தெரிவித்த தூது வர் பைட்டுன் மஹாபன்ன போர்ன், இலங்கைக்கும் தாய் லாந்துக்கும் இடையிலான இரு தரப்பு உறவை வலுப்படுத்துதல், சுற்றுலாத் துறையின் மேம்பாடு, நவீன விவசாய தொழில்நுட்பத் தைப் பயன்படுத்துதல், அறுவ டைக்குப் பிந்தைய தொழில்நுட் பம் மற்றும் உணவு தொடர் பான கூட்டு ஆய்வுகள் குறித் துப் கலந்துரையாடியுள்ளார்.

பிரதமரின் செயலாளர் பிர தீப் சபுதந்திரி, தாய்லாந்து தூத ரகத்தின் மூத்த அதிகாரிகள் பிராங்திப் கோங்கிரிதிசுக்ச கோர்ன் மற்றும் தோம் பெட்ச் புக்டெபோங் ஆகியோர் இந்த கலந்துரையாடலில் கலந்து கொண்டனர். (அ)



# வேட்பு மனுவை தாக்கல் செய்தார் திலித் ஜயவீர!

கொழும்பு, ஒக். 12

சர்வசன அதிகாரம் கூட்ட ணியில் கம்பஹா மாவட்டத் தில் போட்டியிடுவதற்காக தாயக மக்கள் கட்சியின் தலை வர் திலித் ஜயவீர நேற்று வேட்பு மனுவை தாக்கல் செய்தார்.

கம்பஹா மாவட்ட தேர்தல் செயலகத்தில் வேட்பு மனுவை அவர் நேற்று காலை கையளித் தார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தாயக மக்கள் கட்சியின் உப தலைவருமான சன்ன ஜயசுமண மற்றும் முன் னாள் பாராளுமன்ற உறுப்பினர் மிலான் ஜயதிலக ஆகியோரும் சர்வசன அதிகாரம் கூட்டணி சார்பில் கம்பஹா மாவட்டத் தில் போட்டியிட வேட்பு மனு வில் கையெழுத்திட்டமை குறிப் பிடத்தக்கது. (அ)

# பதுளை தேர்தல் செயலகத்தில் வடிவேல் சுரேஷ் வேட்பு மனு

கொழும்பு, ஒக். 12

ஐக்கிய ஜனநாயக குரல் சார் பாக, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஸ் பதுளை மாவட்ட செயலகத் தில், நேற்று முன் தினம் வேட்பு மனுவை தாக்கல் செய்துள்ளார்.

கொழும்பில் ரஞ்சன் ராமநா யக்க தலைமையில், ஐக்கிய ஜன நாயக குரல் என்ற புதிய கட்சி அங்குரார்ப்பணம் செய்து வைக் கப்பட்டது.

கட்சியின் சின்னமாக, ஒலி வாங்கிச் சின்னம், தேர்தல்கள் ஆணைக்குழுவினால் அங்கீ கரிக்கப்பட்ட நிலையில் நேற்று காலை வேட்பு மனுவை தாக் கல் செய்துள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 113இற்கும் அதிகமான ஆசனங்கள் வெல்வோம்!

**பிரதமர் ஹரிணி அமரசூரிய**

கொழும்பு, ஒக். 12

**"பொதுத் தேர்தலில் 113 இற்கும் அதிகமான ஆசனங்களை இம்முறை எங்களால் பெற்றுக்கொள்ள கூடியதாக இருக்கும். அதிக எண்ணிக்கையிலான பெண்கள் பிரதிநிதித்துவத்தை பெற்று இம்முறை பாராளுமன்றத்தில் வரலாற்று சாதனைப் படைப்போம்" என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.**



தேசிய மக்கள் சக்திக்கான வேட்புமனுக்களை தாக்கல் செய்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதித் தேர்தலில் பெற்றுக்கொண்ட வெற்றியை பொதுத் தேர்தலில் மீண்டும் உறுதிப்படுத்துவோம். ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்கவின் வேலைத்திட்டங்களை பலமாக கொண்டு செல்வதற்கான பிரதிநிதித்துவத்தை பாராளுமன்றத்தில் பெற்றுக்கொள்வோம்.

மக்களுக்கு இதுவரை நாங்கள் பொய் வாக்குறுதிகளை வழங்கியதில்லை. சகலருடனும் ஒன்றிணைந்து செயற்பட நாங்கள் தயாராக இருக்கிறோம். ஆனால் ஊழல்வாதிகளுடன் எங்களுக்கு எந்த கொடுக்கல் வாங்கலும் இல்லை. நாட்டு மக்களை ஏமாற்றியவர்களுடன் எந்த தொடர்பும் இல்லை. ஆனால் நாட்டை கட்டியெழுப்ப நேர்மையாக செயற்படுபவர்களுடன் இணைந்து பணியாற்றுவோம்.

113 இற்கும் அதிகமான ஆசனங்களை இம்முறை எங்களால் பெற்றுக்கொள்ள கூடியதாக இருக்கும். அதிக எண்ணிக்கையிலான பெண்கள் பிரதிநிதித்துவத்தை பெற்று இம்முறை பாராளுமன்றத்தில் சாதனை படைப்போம்.

சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தையில் எந்த தடங்களும் ஏற்படாது. எங்களின் நிலைப்பாடுகளையும் வெளிப்படுத்தி வெற்றிகரமாக இந்த பேச்சுவார்த்தையை நிறைவு செய்வோம்-என்றார். (அ)

# 9 மாவட்டங்களில் மண்சரிவு அபாயம்!

கொழும்பு, ஒக். 12

நிலவும் மழையுடனான காலநிலையை அடுத்து 9 மாவட்டங்களுக்கு தேசியக் கட்டட ஆராய்ச்சி நிறுவகம் மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

காலி, களுத்துறை, கேகாலை ஆகிய மாவட்டங்களுக்கு 2ஆம் கட்டத்தின் கீழ் எச்சரிக்கை அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளதாகவும் பதுளை, கொழும்பு, கம்பஹா, மாத்தறை, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கு முதலாம் ஆம் கட்டத்தின் கீழ் எச்சரிக்கை அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# அரச வாகனங்களை பராமரிப்பதில் சிக்கல்!



கொழும்பு, ஒக். 12

அரச அதிகாரிகள் பயன்படுத்தும் உத்தியோகபூர்வ வாகனங்களை முறையாக பராமரிப்பதில் பல சிக்கல்கள் இருப்பதாக முன்னாள் கணக்காய்வாளர் நாயகம் காமினி விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

ஐந்து வருடங்களில் வாகனங்களை மாற்றுவதற்குப் பதிலாக, அவற்றைப் பராமரிப்பதற்கான வேலைத்திட்டம் தயாரிக்கப்பட வேண்டுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசாங்கத்திற்குச் சொந்தமான தொண்ணூறு ஆயிரம் வாகனங்களில் நான்காயிரத்துக்கும் அதிகமான வாகனங்கள் தகுதியற்ற நிலையில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (அ)

# பாராளுமன்றத் தேர்தலுக்குரிய தபால் விநியோக ஏற்பாடு பூர்த்தி

**தபால் திணைக்களம் அறிவிப்பு**

கொழும்பு, ஒக். 12

எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கான தபால் விநியோகப் பணிகளுக்கான ஏற்பாடுகள் பூர்த்தியடைந்துள்ளதாக பிரதி தபால் மாஅதிபர் ராஜித கே. ரணசிங்க தெரிவித்துள்ளார்.

தபால் திணைக்களத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொதுத் தேர்தலுக்கான தபால் விநியோகப் பணிகளை தடையின்றி முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. வாக்காளர் அட்டை விநியோகிப்பதற்குரிய திகதிகள் அனைத்தும் தேர்தல் ஆணைக்குழுவின் அறிவுறுத்தலின் பிரகாரம் முன்னெடுக்கப்படும்.

தேர்தல் பணிகளுக்கான செலவினங்கள் குறித்து நாம் ஆணைக்குழுவுக்கு தெரியப்படுத்தியுள்ளோம். அதன் பிரகாரம் நிதி கிடைக்கப்பெறும்.

தேர்தல் சட்டத்தின் பிரகாரம் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் தலைவர்களுக்கு தங்களது கொள்கைப் பிரகடனத்தை வாக்காளர்களுக்கு இலவசமாக விநியோகிக்க முடியும்.

அவ்வாறானதொரு சூழ்நிலையில் செலவினம் அதிகரிக்கக் கூடும். அது தொடர்பில் உரிய நேரத்தில் நாம் ஆணைக்குழுவுக்கு அறிவிப்போம்-என்றார். (அ)

# புலமைப்பரிசில் பரீட்சை முறைகேடு; சுயாதீன குழு அறிக்கை சமர்ப்பிப்பு

கொழும்பு, ஒக். 12

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள்களில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை, பிரதமரிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது.

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையின் மதிப்பீட்டைத் தற்காலிகமாக நிறுத்தி முறையான விசாரணையை நடத்துமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அண்மையில் உத்தரவிட்டார்.

புலமைப்பரிசில் பரீட்சையை மீண்டும் நடத்துமாறு பெற்றோர்கள் ஆர்ப்பாட்டம் மேற்கொண்டதால், ஜனாதிபதி இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
பரீட்சைத் திணைக்களம் - இலங்கை
Department of Examinations - Sri Lanka

எவ்வாறாயினும், புலமைப்பரிசில் பரீட்சை மீண்டும் நடத்துவதில்லையென்ற, நிபுணர் குழுவின் தீர்மானத்தில் மாற்றம் ஏற்படாதென பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர முன்னதாக தெரிவித்தார்.

எனினும், இக்குழுவின் பரிந்துரைகளை ஆராய்வதற்காக மற்றுமொரு சுயாதீன குழுவைப் பிரதமர் அண்மையில் நியமித்திருந்தார்.

இக்குழுவின் அறிக்கையே பிரதமரிடம் தற்சமயம் கையளிக்கப்பட்டுள்ளது. புலமைப்பரிசில் பரீட்சையின் மதிப்பீட்டை மேற்கொள்வதா, இல்லையா என்பது தொடர்பில் இதுவரை தமக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்படவில்லை என பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

அதேநேரம், மனித உரிமைகள் ஆணைக்குழுவில் பெற்றோர்கள் செய்த முறைப்பாடுகளின் பிரகாரம், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் விசாரணைகள் முடியும் வரை, புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பில் எவ்வித தீர்மானமும் எடுக்கக் கூடாது எனக் கல்வி அமைச்சு மற்றும் பரீட்சை திணைக்களத்துக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# ஆறுகளின் நீர் மட்டம் உயர்வு!

கொழும்பு, ஒக். 12

தொடரும் சீரற்ற வானிலை காரணமாக களு மற்றும் வளவ கங்கைகளின் நீர்மட்டம் அதிகரித்துள்ளது.

இந்த நிலையில், எஹலியகொடை, இரத்தினபுரி, இறக்குவானை மற்றும் பெல்மதுளை ஆகிய பகுதிகளில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

அதேநேரம், புவக்பிட்டிய பகுதியில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக கொழும்பு -அவிசாவளை பிரதான வீதியில் வாகன நெரிசல் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (அ)

# சட்டவிரோத மதுபானத்தை ஏற்றி சென்ற இருவர் கைது!

கொழும்பு, ஒக். 12

சட்டவிரோத மதுபானத்தை ஓட்டோவில் ஏற்றிச் சென்ற இருவர், லுணுகலை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஹொப்டன் பங்களா பிரிவைச் சேர்ந்த 18 மற்றும் 35 வயதுகளையுடைய இரண்டு சந்தேகநபர்களே கைதாகியுள்ளனர்.

இதன்போது, அவர்களிடம் இருந்து 35 லீட்டருக்கும் அதிகளவான கோடா மற்றும் உபகரணங்கள் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

# போலி கடவுச்சீட்டு வைத்திருந்த 8 பங்களாதேஷ் பிரஜைகள் கைது!

கொழும்பு, ஒக். 12

சேர்பிய நாட்டுப் போலி விசாக்களை பயன்படுத்தி கட்டாருக்கு தப்பிச்செல்ல முற்பட்ட 8 பங்களாதேஷ் பிரஜைகள் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கட்டார் நோக்கிச் செல்ல விருந்த விமானத்தில் ஏறுவதற்கு முற்பட்டபோதே அவர்கள் இவ்வாறு கைது செய்யப்பட்டனர். அத்துடன், சேர்பியாவுக்கு செல்வதற்காக நீர்கொழும்பில் உள்ள விடுதி ஒன்றில் 6 பங்களாதேஷ் பிரஜைகள் தங்கியிருப்பதாக தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட குழுவினரிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணையின் மூலம் இந்த விடயம் தெரியவந்துள்ளது. (அ)

# மறு அறிவித்தல் வரை கடலுக்குச் செல்லாதீர்!

கொழும்பு, ஒக். 12

புத்தளத்திலிருந்து கொழும்பு மற்றும் காலி முதல் அம்பாந்தோட்டை வரையான கடற்பரப்புகளில் காற்றின் வேகம் மணிக்கு 60 முதல் 70 கிலோ மீற்றர் வரை அதிகரித்து வீசக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன், கொழும்பிலிருந்து காலி மற்றும் மாத்தறை ஊடாக அம்பாந்தோட்டை வரையான கடற்பகுதிகள் கொந்தளிப்பாகக் காணப்படும்.

எனவே, மறு அறிவித்தல் வரை கடற்றொழிலில் ஈடுபட வேண்டாம் என கடற்றொழிலாளர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் அரசுக் கட்சி வேட்புமனு தாக்கல்

கல்முனை, ஒக். 12

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் வீட்டுச் சின்னத்தில் போட்டியிடும் இலங்கை தமிழ் அரசுக் கட்சியினர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரன் தலைமையில் வேட்புமனு தாக்கல் செய்தனர்.

அந்தக் கட்சியின் வேட்பாளர்கள் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் காரியாலயத்தில் வேட்பு மனுவை தாக்கல் செய்தனர்.



முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தலைமையிலான முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கவிந்திரன் கோடீஸ்வரன் ( அக்கரைப்பற்று) முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் (காரைதீவு) குபேந்திரராஜா ஜெகசுதன் (திருக்கோவில்) கந்தசாமி இந்துனேஷ் ( திருக்கோவில்) அருள்ஞான மூர்த்தி நிதான்ஞ்சன் (கல்முனை) பேரின்பநாயகம் ஜீவராஜ் (தம்பிலுவில்) பாக்கியம் மஞ்சுளா( பெரிய நீலாவணை) ஜெயக்குமார் யசோதரன் (வளத்தாப்பிட்டி) கனகரத்தினம் ஜனார்த்தனன் (ஆலையடிவேம்பு) ஆகியோர் வேட்புமனு தாக்கல் செய்தனர்.



## மாணவர்கள் கௌரவிப்பு

நிந்தவூர், ஒக். 12

நிந்தவூர் அல் - அஷ்ரக் தேசிய பாடசாலையிலிருந்து 2023 இல் க. பொ. த உயர்தரப் பரீட்சைக்கு தோற்றி பல்கலைக் கழகத்துக்கு தெரிவு செய்யப்பட்ட 50 மாணவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் ஏ. அப்துல் கபூர் தலைமையில் நடைபெற்றது.

(எ)





## கழிவுகள் சேகரிப்பு தொடர்பில் மாணவர்களுக்கு விழிப்புணர்வு

அக்கரைப்பற்று, ஒக். 12

லைக்கா ஞானம் அறக்கட்டளையின் ஏற்பாட்டில் அம்பாறை, அக்கரைப்பற்று பிரதேச சபையில் கழிவுகளை தரம் பிரித்தல் தொடர்பான விழிப்புணர்வும் கழிவுகள் சேகரிப்பு தொட்டிகள் வழங்கும் நிகழ்வும் நடைபெற்றது.

இந்த விழிப்புணர்வூட்டும் செயல்திட்டம் அக்கரைப்பற்று பிரதேச சபையின் செயலாளர் ஐ. இர்பான் தலைமையில் பிரதேச சபை பொது மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது, திண்மக் கழிவுப்பொருட்களை தரம் பிரித்து வகைப்படுத்தி சேகரிக்கும் பணிகள் தொடர்பில் பாடசாலை மாணவர்களுக்கு விரிவாக விளக்கவுரைகள் வழங்கப்பட்டன. (எ)



## த. தே. ம. முன்னணியினர் அம்பாறையில் வேட்புமனு

கல்முனை, ஒக். 12

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் (தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி) கட்சியினர் திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்துக்குரிய வேட்புமனுக்களை அம்பாறை மாவட்டச் செயலகத்தில் கையளித்தனர்.

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தலைமையிலான குழுவினர் வேட்புமனுத் தாக்கல் செய்தனர்.



அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் சைக்கிள் சின்னத்தில் போட்டியிடுகிறது. (எ)

## வலய கல்வி பணிமனையில் களைகட்டியது வாணி விழா

காரைதீவு, ஒக். 12

சம்மாந்துறை வலயக் கல்விப் பணிமனையின் வருடாந்த வாணி விழா பணிப்பாளர் செபமாலை மகேந்திரகுமார் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

பணிமனையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இந்த விழாவில் ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் வி. ரி. சகாதேவராஜா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்தினார்.

கணக்காளர் சீ. திருப்பிரகாசம், பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான யாசிர் அரபாத், பி. பரமதயாளன் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினர்.

இந்து, இஸ்லாம், பௌத்த உத்தியோகத்தர்கள் இணைந்து இந்த பூஜை நடைபெற்றது.

கோரக்கர் தமிழ் மகா வித்தியாலயம் மற்றும் வீரமுனை இராமகிருஷ்ண வித்தியாலய மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. (எ)

## காஸ் சிலிண்டர் சின்னத்தில் அதாவுல்லா, முஷாரப் போட்டி

கல்முனை, ஒக். 12

திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் புதிய ஜனநாயக முன்னணியின் ஹாஸ் சிலிண்டர் சின்னத்தில் 06 முஸ்லிம்களும் 03 சிங்களவர்களும் ஒரு தமிழரும் போட்டியிடுகின்றனர்.

முன்னாள் அமைச்சரான தேசிய காங்கிரஸ் தலைவர் ஏ. எல். எம். அதாவுல்லாவும் இந்த வேட்பாளர் பட்டியலில் இடம் பெற்றுள்ளார்.

அத்துடன் முன்னாள் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். எம். எம். முஷாரப், கிழக்கு மாகாண சபையின் முன்னாள் முஸ்லிம் காங்கிரஸ் குழுத் தலைவர் ஏ. எம். ஜெமீல் ஆகியோரும் ஹாஸ் சிலிண்டர் சின்னத்தில் போட்டியிடுகின்றனர்.

இவர்களுடன் ஐக்கிய தேசிய கட்சியின் பொத்துவில் தொகுதி அமைப்பாளர் லொயிட்ஸ் ஆதம் லெப்பை, நுஸ்கி அஹமட் ஆகியோரும் ஒரேயொரு தமிழ் வேட்பாளராக வி. ஜெயச்சந்திரனும் போட்டியிடுகின்றனர்.

அத்துடன் முன்னாள் அமைச்சர் தயா கமகே, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிறீயானி விஜேவிக்கிரம மற்றும் பிரான்ஸிஸ் டயஸ் ஆகியோரும் போட்டியிடுகின்றனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஸாவில் நீடிக்கும் போர்க் குற்றங்கள்!

## இஸ்ரேல்மீது ஐ. நா. ஆதரவு அமைப்பு குற்றச்சாட்டு

நியூயோர்க், ஒக். 12

**காஸாவின் சுகாதார துறையை இஸ்ரேல் அழித்துக் கொண்டிருக்கிறது. இவையெல்லாம் போர்க்குற்றங்கள் மற்றும் மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள் என்று ஐ. நா. ஆதரவு அமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.**

இஸ்ரேல் - ஹமாஸ் இடையிலான போர் ஓராண்டை கடந்து நீடிக்கிறது. ஹமாஸ் அமைப்பினரை ஒழிக்கும் நடவடிக்கையாக காஸா மீது இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதல்களில் ஹமாஸ் அமைப்பினர் மற்றும் அப்பாவி பலஸ்தீன மக்கள் என இதுவரை 42 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். இந்தப் போரில் காஸாவின் உட்கட்டமைப்புகள் உருக்குலைந்துள்ளன. இந்த நிலை நீடித்தால் காஸாவை மீண்டும் கட்டமைப்பதற்கு பல நூற்றாண்டுகள் ஆகும்.

இந்த நிலையில், காஸாவின் சுகாதாரத் துறையை இஸ்ரேல் அழித்து வருவதாகவும், இரு தரப்பினரும் மக்களை சித்திரவதை செய்ததாகவும் ஐ. நா. ஆதரவு வல்லுநர் குழு குற்றஞ்சாட்டியுள்ளது.

இஸ்ரேல் மற்றும் அதன் கட்டுப்பாட்டில் உள்ள பலஸ்தீனப் பகுதிகளில் மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள் குறித்து ஆராய்வதற்காக 2021இல் இந்த குழு அமைக்கப்பட்டது. இந்த குழுவை ஐ. நா. ஆதரவு மனித உரிமைகள் சபை நியமித்தது.

இந்த குழு நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில், இஸ்ரேல் மீது குற்றஞ்சாட்டியுள்ளது. பலஸ்தீனிய மருத்துவ ஊழியர்களின் வாகனங்களை இஸ்ரேல் குறிவைத்து தாக்குதல் நடத்தி, வேண்டுமென்றே அவர்களை கொல்வது, பிடித்து காவலில் வைத்து சித்திரவதை செய்வது போன்ற நடவடிக்கையில் ஈடுபடுவதாகவும், காஸாவில் இருந்து பாதிக்கப்பட்டவர்களை மருத்துவ சிகிச்சைக்காக வெளியில் கொண்டு செல்வதற்காக கட்டுப்பாடுகளை விதிப்பதாகவும், அந்த அறிக்கையில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இவையெல்லாம் போர்க்குற்றங்கள் மற்றும் மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள் என்றும் குற்றஞ்சாட்டியுள்ளது. (எ)



# மோடி வழங்கிய கிரீடம் திருட்டு

டாக்கா, ஒக். 12

பங்களாதேஷில் உள்ள காளி தேவி கோவிலுக்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி பரிசாக வழங்கிய கிரீடம் திருடப்பட்டுள்ளது.

பங்களாதேஷின் சத்கிரா சியாம்நகர் பகுதியில் பிரசித்தி பெற்ற ஜெசோரேஷ்வரி காளி தேவி கோவில் அமைந்துள்ளது. இந்து புராணங்களின்படி, இந்தியா மற்றும் அண்டை நாடுகளில் இருக்கும் 51 சக்தி பீடங்களில் ஒன்றாக ஜெசோரேஷ்வரி கோவில் விளங்குகிறது.

கடந்த 2021ஆம் ஆண்டு பிரதமர் மோடி தனது பங்களாதேஷ் சுற்றுப்பயணத்தின்போது இந்த கோவிலுக்கு சென்றிருந்தார். அப்போது அவர் அங்குள்ள காளி தேவி சிலைக்கு, தங்க முலாம் பூசப்பட்ட வெள்ளி கிரீடம் ஒன்றை பரிசாக வழங்கினார்.

இந்த நிலையில், பிரதமர் மோடி பரிசாக வழங்கிய கிரீடம் திருடப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் கோவில் பூசாரி தினசரி பூஜையை முடித்துவிட்டு சென்ற பிறகு, மதியம் 2 மணி முதல் 2. 30 மணிக்குள் இந்த திருட்டு இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# தென்கொரிய பெண் எழுத்தாளருக்கு இலக்கியத்துக்கான நோபல் பரிசு




ஸ்டாக்ஹோம், ஒக். 12

தென்கொரிய பெண் எழுத்தாளர் ஹான் காங்கிற்கு இந்த ஆண்டுக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

உலகளவில் மருத்துவம், இயற்பியல், வேதியியல், இலக்கியம், பொருளாதாரம், அமைதி ஆகிய துறைகளில் மகத்தான சாதனை படைப்பவர்களுக்கு ஆண்டுதோறும் நோபல் பரிசு வழங்கப்படுகிறது.

இந்த நிலையில் 2024ஆம் ஆண்டு இலக்கியத்துக்கான நோபல் பரிசு தென்கொரிய பெண் எழுத்தாளர் ஹான் காங்கிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. மனித வாழ்க்கை குறித்த கவிதைக்காக அவருக்கு நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# ஈரானுக்கு கொடுக்கும் பதிலடி மரண அடியாக இருக்கும்

## இஸ்ரேல் இராணுவ அமைச்சர்

ஜெருசலேம், ஒக். 12

ஈரானுக்கு கொடுக்கும் பதிலடி மரண அடியாக இருக்கும் என்று இஸ்ரேல் இராணுவ அமைச்சர் யோவ் கேலன்ட் எச்சரித்துள்ளார்.

இஸ்ரேல்மீது ஈரான் சரமாரியான ஏவுகணை தாக்குதலை நடத்தியது.

இந்த நிலையில், இஸ்ரேல் இராணுவத்தினருடன் நடந்த சந்திப்புக்கு பிறகு இராணுவ அமைச்சர் யோவ் கேலன்ட் தனது எக்ஸ் வலைத்தளத்தில் இதுபற்றி பதிவிட்டுள்ளார். அதில், "ஈரான் மீதான எங்கள் தாக்குதல் மிக மோசமானதாகவும், துல்லியமாகவும், ஆச்சரியம் அளிக்கும் வகையிலும் இருக்கும். இஸ்ரேலுக்கு தீங்கு விளைவிக்க முயற்சிப்பவர்கள் அதற்கு உரிய விலை கொடுப்பார்கள்" என்று குறிப்பிட்டுள்ளார். (எ)

# தஞ்சமடைந்த மக்களின்மீது இஸ்ரேல் படைகள் தாக்குதல்

## 28 பேர் உயிரிழந்தனர்

காஸா, ஒக். 12

மத்திய காஸாவில் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருந்த பாடசாலை மீது இஸ்ரேல் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் 28 பேர் உயிரிழந்தனர் என மருத்துவப் பணியாளர்கள் தெரிவித்தனர்.

காஸாவின் டெய்ர் அல் பலாவில் இடம்பெற்ற இந்தத் தாக்குதலில் 50இற்கும் அதிக மாணவர்கள் காயமடைந்தனர் என செம்பிறை குழு தெரிவித்துள்ளது.

பலஸ்தீன செம்பிறை குழுவின் தலைமையகத்துக்கு அருகில் இந்தத் தாக்குதல் இடம்பெற்றது.

இதேவேளை, அந்தப் பகுதியில் செயல்பட்ட பயங்கரவாதிகளை இலக்குவைத்து துல்லியமான தாக்குதலை மேற்கொண்டதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது. (எ)

# மில்டன் புயலால் 10 பேர் பலி!

வாஷிங்டன், ஒக். 12

புளோரிடா மாகாணத்தை தாக்கிய மில்டன் புயலால் பல நகரங்கள் வெள்ளத்தில் மிதக்கின்றன. இதேவேளை, 10 பேர் உயிரிழந்தனர் என்று தகவல் வெளியாகியுள்ளது.

மேலும், இந்தப் புயலால் கட்டுமானப் பணிக்காக நிறுத்தப்பட்டிருந்த ஒரு இராட்சத கிரேன் கவிழ்ந்தது. இதில் அடுக்குமாடி குடியிருப்புகள் கடுமையாக சேதமடைந்தன. புளோரிடா மாகாணத்தை மில்டன் புயல் பந்தாடியுள்ளது.



புயல் காற்று வீசியபோது ஏராளமான மரங்கள் மற்றும் மின்கம்பங்கள் அடியோடு சரிந்து விழுந்தன. எனவே, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மின்சாரம் துண்டிக்கப்பட்டதால் சுமார் 30 இலட்சம் பேர் இருளில் சிக்கித் தவித்தனர். இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றிலும் முடங்கியுள்ளது. (எ)

# "போர் பதற்றம் நிலவும் சூழலில் நாடுகளின் நட்பு மிக முக்கியம்"

வியன்டியேன், ஒக். 12

உலகில் போர் பதற்றம் நிலவும் சூழலில், இந்தியா - ஆசியான் நாடுகளின் நட்புறவு மிக முக்கியம் என்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

தென்கிழக்கு ஆசிய நாடுகளின் கூட்டமைப்பு 'ஆசியான்' என அழைக்கப்படுகிறது. இந்த அமைப்புகளின் உச்சி மாநாடுகள் லாவோஸ் நாட்டின் தலைமையில் அந்த நாட்டின் தலைநகர் வியன்டியேனில் நடைபெறுகிறது. இந்த மாநாடு குறித்து செய்தியாளர்களிடம் மோடி கூறுகையில், "கிழக்கு ஆசிய கொள்கையை உருவாக்கி 10 ஆண்டுகள் ஆகிவிட்டன. இதன்மூலம் நமது நாடு கணிசமான பலன்களை பெற்றுள்ளது. எதிர்காலத்தில் முழு ஒத்துழைப்புடன் செயல்படுவது குறித்து ஆசியான் தலைவர்களுடன் ஆலோசிக்க உள்ளேன். இந்தோ - பசிபிக் பகுதியில் அமைதி, நிலைத்தன்மை மற்றும் செழிப்பு ஏற்பட சவால்களாக உள்ள விடயங்கள் குறித்து கிழக்கு ஆசியா மாநாட்டில் ஆலோசிக்க சிறந்த வாய்ப்பு கிடைத்துள்ளது" என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்கிலாந்து இன்னிங்ஸ் வெற்றி பாகிஸ்தான் மீண்டும் சொதப்பல்

முல்தான், ஒக். 12

பாகிஸ்தான் அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி, இன்னிங்ஸ் மற்றும் 47 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

பாகிஸ்தானின் முல்தான் நகரில் நடைபெற்ற இந்த டெஸ்ட் போட்டியில் முதல் இன்னிங்ஸில் பாகிஸ்தான் அணி 149 ஓவர்களில் 556 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 7 விக்கெட்கள் இழப்புக்கு 823 ஓட்டங்களைக் குவித்து ஆட்டத்தை இடை நிறுத்தியது. இதனையடுத்து 267 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் இரண்டாவது இன்னிங்ஸில் விளையாடிய பாகிஸ்தான் அணி 220 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்து இன்னிங்ஸ் மற்றும் 47 ஓட்டங்கள் வித்தியாசத்தில் படுதோல்வி அடைந்தது. அண்மையில் பங்களாதேஷ் அணியுடனான டெஸ்ட் போட்டியில் படுதோல்வி அடைந்த பாகிஸ்தான் அணி மீண்டும் சொந்த மண்ணில் டெஸ்ட் போட்டியில் தோல்வியடைந்தது அந்த அணி இரசிகர்கள் மத்தியில் பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. (எ)





## உபுல் தரங்கவுக்கு எதிராக பிடியாணை

கொழும்பு, ஒக். 12

இலங்கை கிரிக்கெட் அணியின் தெரிவுக் குழுத் தலைவர் உப்புல் தரங்கவுக்கு எதிராக மாத்தளை உயர் நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வழக்கு விசாரணை ஒன்று தொடர்பில் நீதிமன்றத்தில் முன்னிலையாகத் தவறியதாலேயே அவருக்கு எதிராக பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கண்டியில் நடைபெற்ற லெஜெண்ட்ஸ் லீக் சுற்றுப் போட்டியில் ஆட்ட நிர்ணயம் இடம்பெற்றதாக உப்புல் தரங்கவால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு ஒன்றுடன் தொடர்புபட்டதாக இந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. (எ)

## 8 விக்கெட் வித்தியாசத்தில் மே. இ. தீவுகள் அணி வெற்றி

ஷார்ஜா, ஒக். 12

நடப்பு மகளிர் ரி - 20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் குரூப் சுற்று ஆட்டத்தில் பங்களாதேஷ் அணியை 8 விக்கெட்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி மேற்கு இந்திய தீவுகள் அணி அபார வெற்றி பெற்றது.

ஷார்ஜாவில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 20 ஓவர்களில் 8 விக்கெட்கள் இழப்புக்கு 103 ஓட்டங்கள் எடுத்தது. அந்த அணியின் தலைவி நிகர் சுல்தானா 39 ஓட்டங்கள் எடுத்தார். மேற்கு இந்திய தீவுகள் அணியின் கரிஷ்மா 4 விக்கெட்கள் கைப்பற்றினார்.

104 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை மேற்கு இந்திய தீவுகள் அணி விரட்டியது. இந்த நிலையில் 12. 5 ஓவர்களில் 2 விக்கெட்கள் இழப்புக்கு இலக்கை எட்டியது மேற்கு இந்திய தீவுகள் அணி. ஹேலி மேத்யூஸ் 34 ஓட்டங்கள் எடுத்தார். ஸ்டா பானி 27, ஷெமைன் 21 மற்றும் தியாந்திரா 19 ஓட்டங்கள் எடுத்தனர்.

குரூப் - பி சுற்றில் மேற்கு இந்திய தீவுகள், தென்னாபிரிக்கா மற்றும் இங்கிலாந்து அணிகள் தலா 2 வெற்றிகளுடன் 4 புள்ளிகளை பெற்றுள்ளது. இதன் மூலம் அரையிறுதி சுற்றுக்கு முன்னேறுவதில் அணிகளுக்கு இடையில் கடும் போட்டி நிலவி வருகிறது. (எ)





## ரபேல் நடால் ஓய்வு

வாஷிங்டன், ஒக். 12

தொழில்முறை ரென்னிஸ் விளையாட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக ரபேல் நடால் அறிவித்துள்ளார். அடுத்த மாதம் நடைபெறும் டேவிஸ் கிண்ணத் தொடருடன் ஓய்வு பெறவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

38 வயதான ரபேல் நடால், இதுவரை ஆடவர் ஒற்றையர் பிரிவில் 22 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றுள்ளார். அதில் 14 பட்டங்கள் பிரெஞ்ச் ஓபன் தொடரில் வென்றதாகும். சுமார் 20 ஆண்டு காலம் களிமண் களத்தில் தனது ஆட்டத்தின் மூலம் ஆதிக்கம் செலுத்தியவர் நடால். கடைசியாக கடந்த 2022இல் பிரெஞ்ச் ஓபன் பட்டம் வென்றிருந்தார்.

இந்தச் சூழலில் எதிர்வரும் டேவிஸ் கிண்ணத் தொடருடன் அவர் ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். இது குறித்து நடால் கூறுகையில், "நான் தொழில்முறை ரென்னிஸ் விளையாட்டில் இருந்து ஓய்வு பெறுகிறேன் என தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த இரண்டு ஆண்டுகளாக இந்தப் பயணம் மிகக் கடுமையாக இருந்தது.

என்று நடால் கூறினார். "கடந்த சில வருடங்கள், குறிப்பாக கடந்த இரண்டு வருடங்கள் கடினமாக இருந்தன. வரம்புகள் இல்லாமல் என்னால் விளையாட முடிந்தது என்று நான் நினைக்கவில்லை. சில எல்லைகளுக்கு உட்பட்டு நான் விளையாட வேண்டியுள்ளது" என தெரிவித்தார். (எ)

## இந்தியா - பங்களாதேஷ் கடைசி ரி - 20 இன்று

ஹைதராபாத், ஒக். 12

இந்தியா - பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான கடைசி ரி - 20 போட்டி இன்று நடைபெறுகிறது.

இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பங்களாதேஷ் கிரிக்கெட் அணி 3 போட்டிகள் ரி - 20 தொடரில் பங்கேற்றுள்ளது. இதில் குவாலியரில் நடந்த தொடக்க ஆட்டத்தில் 7 விக்கெட்கள் வித்தியாசத்திலும், டில்லியில் நடந்த 2ஆவது ஆட்டத்தில் 86 ஓட்டங்கள் வித்தியாசத்திலும் இந்தியா வெற்றி பெற்று தொடரை 2 - 0 என்ற கணக்கில் கைப்பற்றி விட்டது.

இந்த நிலையில் இவ்விரு அணிகள் இடையிலான 3ஆவது மற்றும் கடைசி ரி - 20 போட்டி ஹைதராபாத்தில் உள்ள ராஜீவ் காந்தி மைதானத்தில் இன்று சனிக்கிழமை இரவு 7 மணிக்கு நடைபெறுகிறது. (எ)

## ஷங்காய் மாஸ்டர்ஸ் ரென்னிஸ்; அல்காரஸ் அதிர்ச்சி தோல்வி



பீஜிங், ஒக். 12

ஷங்காய் மாஸ்டர்ஸ் ரென்னிஸ் தொடரின் காலிறுதியில் கார்லஸ் அல்காரஸ் அதிர்ச்சி தோல்வியடைந்தார்.

ஷங்காய் மாஸ்டர்ஸ் ரென்னிஸ் தொடர் சீனாவில் நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் ஸ்பெயின் வீரர் கார்லஸ் அல்காரஸ், செக் நாட்டின் தாமஸ் மகக் ஆகியோர் மோதினர்.

பரபரப்பான இந்த ஆட்டத்தில் தாமஸ் மகக் சிறப்பாக விளையாடினார் . இதனால் 7(7) - 6 (5) , 7 - 5 என்ற செட் கணக்கில் தாமஸ் மகக் வெற்றி பெற்றார். இதனால் அவர் அரையிறுதிக்கு முன்னேறினார். (எ)

## டெஸ்ட் சம்பியன்ஷிப் பட்டியலில் சரிவை சந்தித்தது பாகிஸ்தான்

டுபாய், ஒக். 12

இங்கிலாந்துக்கு எதிரான போட்டியில் தோல்வியடைந்த பாகிஸ்தான் அணி டெஸ்ட் சம்பியன்ஷிப் பட்டியலில் பெரும் சரிவை சந்தித்தது.

பாகிஸ்தான் - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் போட்டி முல்தானில் நடைபெற்றது. இந்த ஆட்டத்தில் இங்கிலாந்து இன்னிங்ஸ் மற்றும் 47 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 1 - 0 என இங்கிலாந்து முன்னிலையில் உள்ளது. இவ்விரு அணிகள் இடையிலான 2ஆவது டெஸ்ட் போட்டி வரும் 15ஆம் திகதி தொடங்குகிறது.

இந்த நிலையில், பாகிஸ்தான் - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் போட்டி முடிவடைந்ததை அடுத்து உலக டெஸ்ட் சம்பியன்ஷிப்பின் புதிய தரவரிசை பட்டியலை சர்வதேச கிரிக்கெட் பேரவை (ஐ. சி. சி) வெளியிட்டுள்ளது. இதில் முதலிடத்தில் இந்தியாவும் (74. 24 சதவீதம்), 2ஆம் இடத்தில் அவுஸ்திரேலியாவும் (62. 50 சதவீதம்), 3ஆம் இடத்தில் இலங்கையும் (55. 56 சதவீதம்) தொடர்கின்றன.

பாகிஸ்தானுக்கு எதிராக வெற்றி பெற்ற இங்கிலாந்து (45. 59 சதவீதம்) 4ஆவது இடத்திலும், தென்னாபிரிக்கா (38. 89 சதவீதம்) 5ஆவது இடத்திலும், நியூசிலாந்து (37. 50 சதவீதம்) 6ஆவது இடத்திலும், பங்களாதேஷ் (34.38 சதவீதம்) 7ஆவது இடத்திலும் உள்ளன.

8ஆவது இடத்தில் இருந்த பாகிஸ்தான் (16. 67 சதவீதம்) இங்கிலாந்துக்கு எதிராக தோல்வி கண்டதை அடுத்து 9ஆவது இடத்துக்கு சரிந்துள்ளது. 9ஆவது இடத்தில் இருந்த மேற்கு இந்திய தீவுகள் அணி (18. 52 சதவீதம்) 8ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வன்னியில்...

மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் சரத்சந்திர தெரிவித்தார்.

இதன்படி, வவுனியா மாவட்டத்தில் தெரிவாகும் 6 பாராளுமன்ற உறுப்புரிமைகளுக்காக 423 பேர் போட்டியிடு கின்றனர். (ஐ)

## தமிழ் அரசு...

கட்சியின் சார்பில் நால்வரும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி சார்பில் மூவரும் போட்டி யிடுகின்றனர்.

தேவகடாட்சம் யதீந்திரா, சண்முகம் குகதாசன், சுந்தாசாமி ஜீவரூபன், கதிர் காமத்தம்பி சுந்தரலிங்கம், காளிராஜா கோகிலராஜ், சட்டத்தரணி துஷ்யந்தன் உட்பட 7 பேர் வேட்பாளர்களாவர். (ஐ)

## வங்காள...

தலைவர் கலாநிதி நாகமுத்து பிரதீப ராஜா அறிவித்துள்ளார்.

இத்தாழமுக்கத்தோடு இவ்வாண்டுக் கான வடகீழ் பருவக்காற்றின் உடைவும் ஏற்படும்.

எனவே நாளை முதல் 20 ஆம் திகதி வரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங் களின் பல பகுதிகளுக்கும் கனமானது முதல் மிகக் கனமானது வரை மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.

இத்தாழமுக்கத்தோடு இணைந்து அதிக மழை கிடைக்கும் வாய்ப்புள்ளத னால் இவ்வாண்டுக்கான பெரும் போக நெற் செய்கைக்கான விதைப்பை மேற் கொள்பவர்கள் இந்த மழை நாட்களைக் கருத்தில் கொள்வது சிறந்தது என அவர் மேலும் தெரிவித்தார். (அ)

## ஐ.நா...

இருந்தனர் என இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் ரசிக குமார தெரி வித்துள்ளார்.

குறித்த இருவரும் வைத்தியசாலை யில் சிகிச்சை பெற்று வருவதாக தெரி விக்கப்பட்டுள்ளது.

லெபனானின் நகோரா தலைமை யகத்தில் உள்ள ஐ.நா இடைக்காலப் படை மற்றும் அருகிலுள்ள தளங்கள் மீது மீண்டும் மீண்டும் தாக்குதல் மேற் கொள்ளப்பட்டதாக ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## அமைதிக்கான...

அந்த வகையில் இந்த ஆண்டுக்கான நோபல் பரிசுகள் கடந்த 7ஆம் திகதி முதல் அறிவிக்கப்பட்டு வருகின்றன. முதல் நாளில் மருத்துவத்துக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து இயற்பியல், வேதியியலுக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டன.

இந்த நிலையில், 2024ஆம் ஆண்டுக் கான அமைதிக்கான நோபல் பரிசு ஜப்பானை சேர்ந்த நிஹோன் ஹிடாங்க்யோ அமைப்புக்கு அறிவிக்கப் பட்டுள்ளது.

அணு ஆயுதங்கள் இல்லாத உலகை அடைவதற்கான முயற்சிகளை அந்த அமைப்பு மேற்கொண்டதற்காகவே அமைதிக்கான நோபல் பரிசு அறிவிக்கப் பட்டுள்ளது.

ஹிரோஷிமா, நாகசாகியில் அணு குண்டால் பாதிக்கப்பட்டோரின் நல னுக்காக தொடர்ந்து அந்த அமைப்பு பணியாற்றி வருகிறது. அணு ஆயுதங் களை மீண்டும் பயன்படுத்தக்கூடாது என்பதை அந்த அமைப்பு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

இறுதியாக, பொருளாதாரத்துக்கான நோபல் பரிசு வருகிற 14ஆம் திகதி அறிவிக்கப்படவுள்ளது. நோபல் பரிசு நிறுவனரான அல்பிரெட் நோபலின் நினைவு நாளான டிசெம்பர் 10ஆம் திகதி ஸ்டாக்ஹோமில் நடைபெறும் விழாவில் இந்த விருதுகள் வழங்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஐ.ம.கூட்டணியினர் வன்னியில் நேற்று வேட்புமனு

வவுனியா, ஒக். 12

வன்னித் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவை ஐக்கிய மக்கள் கூட்டணி நேற்று தாக்கல் செய்தது. எதிர்வரும் நவம்பர் நடைபெற வுள்ள பாராளுமன்ற தேர்தலில் சஜித் பிரேம தாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் கூட்டணி தொலைபேசி சின்னத் தில் போட்டியிடுகின்றது.

இந்நிலையில் வவுனியா மாவட்ட செய லகத்தில் அமைந்துள்ள தேர்தல் பணி மனையில் நேற்று காலை வேட்பு மனு வைத் தாக்கல் செய்திருந்தது.

## வியாழேந்திரனின்...

நிராகரிக்கப்பட்டதாக மட்டக்களப்பு மாவட்ட தெரிவித்தாட்சி அலுவலர் அறிவித்தார்.

நேற்று வெள்ளிக்கிழமையுடன் வேட்புமனு தாக்கல் செய்யும் காலம் நிறைவடைந்தமையால் வரும் பாராளு மன்றத் தேர்தலில் அவர் போட்டியிடுவ தற்கு இனி சந்தர்ப்பம் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## யாழில்...

வெள்ளிக்கிழமை மதியம் 12 மணி வரை வேட்புமனுக்களை தாக்கல் செய்தன.

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத் தில் 23 அரசியல் கட்சிகளும் 23 சுயேச் சைக் குழுக்களும் தேர்தலில் போட்டி யிட வேட்புமனுக்களை யாழ். மாவட்ட செயலகத்தில் தாக்கல் செய்திருந்தன. இதில், இரு சுயேச்சை குழுக்களின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டன என்று யாழ். மாவட்ட அரச அதிபர் ம. பிரதீபன் தெரிவித்தார்.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், இலங்கை தமிழ் அரசுக் கட்சி, ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி, தமிழ் மக்கள் கூட்டணி, ஐக்கிய தேசியக் கட்சி, ஐக் கிய மக்கள் சக்தி, சிறி லங்கா பொதுஜன பெரமுன உள்ளிட்ட 23 அரசியல் கட்சி களும் ஜனநாயக தமிழ் அரசு கூட்ட மைப்பு உள்ளிட்ட 21 சுயேச்சை குழுக்க ளுமாக 44 அணிகள் யாழ்ப்பாணத்தில் போட்டியிடுகின்றன.

கடந்த எந்தத் தேர்தலிலும் இல்லாத வாறு அதிகளவான அரசியல் கட்சிக ளும் சுயேச்சைக் குழுக்களும் இந்த ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் களமி றங்கியுள்ளன என்பது குறிப்பிடத்தக் கது. (ஐ)

## ஓமந்தை...

குளத்தை சேர்ந்த ரூ. திலீபன் (வயது 42) என்ற மூன்று பிள்ளைகளின் தந் தையே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

உயிரிழந்த நபரும் அவரின் மருமக னும் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை காணியை துப்புரவு செய்துகொண்டி ருந்தபோது அங்கு வந்த சிலர் அவர் கள்மீது மிளகாய்த்தூளை வீசிவிட்டு, அவர்களை வாளால் வெட்டினர் என்று கூறப்படுகின்றது.

இந்த சம்பவத்தில் இரு பிள்ளைக ளின் தந்தையான இளங்கோ (வயது 38) என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந் தார். மற்றையவரான திலீபன் படுகாயம டைந்த நிலையில் ஊரவர்க ளால் மீட்கப் பட்டு வவுனியா பொது மருத்துவம னையில் சேர்க்கப்பட்டார். அங்கு சிகிச்சை பெற்றுவந்த நிலையில் அவர் நேற்று வெள்ளிக்கிழமை உயிரி ழந்தார்.

இரு குடும்பங்களுக்கு இடையே நிலவி வந்த காணி பிணக்கே இந்த வாள் வெட்டுக்குக் காரணம் என்று தெரிவிக் கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் ஓமந்தை பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஐ)

# தமிழ் அரசில் ஜனநாயகம் குழிதோண்டி புதைப்பு!

### சரவணபவன் சாடல்

யாழ்ப்பாணம், ஒக். 12

நாங்கள் இலங்கை தமிழ் அரசுக் கட்சியில் இருந்துதான் வந்தோம். அங்கே ஜனநாயகம் குழிதோண்டி புதைக்கப்பட்டுக் கொண்டு வருகின்றது இவ்வாறு ஜனநாயக தமிழ் அரசுக் கூட்ட மைப்பின் வேட்பாளர் ஈ. சரவணபவன் தெரிவித்துள்ளார்.

நேற்று வேட்புமனு தாக்கல் செய்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளி யிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், "ஒரு தனிநபரின் ஆதிக்கத் தால் இலங்கை தமிழ் அரசுக் கட்சியில் இருந்து பலர் வெளியேறியுள்ளார்கள். இறுதியில் தலைவரும் பதவியை இராஜி நாமா செய்துள்ளார். நீண்ட காலமாக செயல்பட்டு வந்த சட்டத்தரணி கே. வி. தவராசா அவர்களும் கட்சியில் இருந்து விலகியுள்ளார்.

யார் யார் கட்சியில் இருந்து விலகினார்கள் என பார்ப்போமேயா னால், 2010 ஆம் ஆண்டிலிருந்து அடுக் கிக் கொண்டே செல்லலாம். எல்லோ ரும் தொடர்ச்சியாக யாழ். மண்ணில் இருந்தவர்கள். ஆனால், யாழ்ப்பாணத் தில் இல்லாத ஒருவருடைய ஆதிக்கம் மேலோங்கி அந்தக் கட்சியானது ஜனநாயக கட்சி என்று சொல்ல முடியாத நிலையில் செயற்படுகின்றது.

உண்மையில் வீட்டை விட்டு வெளியே வருவதற்கு எமக்கு விருப்ப மில்லை. ஆனாலும் தவிர்க்க முடியாத சூழ்நிலையால் வெளியே வந்து எமது ஜனநாயக ரீதியிலான பலத்தை காட்ட வேண்டிய தேவை எமக்குள்ளது. மக் களை ஒன்றுசேர்க்க வேண்டியிருக்கிறது.

எல்லோரையும் உள்வாங்கி, எல்லோருக்கும் சமபங்கு கொடுத்து, நாங்கள் செயல்பட வேண்டிய ஒரு சூழ்நிலையில் இருக்கின்றோம். நாங்கள் தற்போது சுயேச்சையாக தேர்தலில் களமிறங்கினாலும் அது நாளடைவில் ஒரு கட்சியாக பரிணமிக்கும் - என்றார். (ஐ-05)

## மாம்பழத்துடன்...



என்ற பெயரில் யாழ்ப்பாணத்தில் சுயேச் சையாக மாம்பழம் சின்னத்தில் போட்டி யிடுகின்றனர்.

நேற்றுக் காலை வேட்புமனுவை தாக்கல் செய்த கே. வி. தவராசா தலை மையிலான குழுவினர் நேற்று மாலை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவின் இல்லத்துக்கு சென்று, அவரிடம் ஆசி பெற்றதுடன் அவருடன் உரையாடினர்.

இதன்போது, அவர்கள் மாவை சேனாதிராசாவுக்கு மாம்பழங்களையும் வழங்கி வைத்தனர்.

இந்த சந்திப்பில், ஜனாதிபதி சட்டத் தரணி கே.வி.தவராசா, ஈ. சரவணபவண், பொ. ஐங்கரநேசன் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டிருந்தனர். (ஐ-05)

## 22 தேர்தல் மாவட்டங்களில்...

நண்பகல் 12 மணியுடன் நிறைவடைந் தது.

இதைத் தொடர்ந்து வேட்புமனு தொடர்பான செய்தியாளர் சந்திப்பை தேர்தல்கள் திணைக்களத்தில் ஆணை யாளர் சமன் சிறீ ரத்நாயக்க நேற்று நடத்தியிருந்தார். அதில், அவர் தெரி வித்தவை வருமாறு,

பாராளுமன்றத் தேர்தலில் போட்டி யிடுவதற்கு நாடு முழுவதுமுள்ள 22 தேர்தல் மாவட்டங்களிலும் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் சார்ந்து 764 வேட்புமனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டன. இவற்றில் 74 வேட்புமனுக்கள் நிராகரிக் கப்பட்டன.

திகாமடுல்ல (அம்பாறை) தேர்தல் மாவட்டத்திலேயே அதிக எண்ணிக்கை யான அரசியல் குழுக்கள் போட்டியிடு கின்றன. இங்கு, 72 கட்சிகள், சுயேச்சை குழுக்கள் வேட்புமனுக்களை தாக்கல் செய்திருந்தன. இவற்றில் 8 வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டன. இதனால், 64 கட்சிகள் மற்றும் சுயேச்சை கள் இந்தத் தேர்தலில் போட்டியிடுகின் றன.

இதேநேரம், மொனராகலை, பொல நறுவை மாவட்டங்களில் குறைந்த விலான கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் போட்டியிடுகின்றன. அங்கு தலா 15 கட்சிகள் மற்றும் சுயேச்சை குழுக்கள் தேர்தலில் போட்டியிடுகின்றன - என்றார்.

இதேவேளை, வடக்கு மாகாணத்தில் கட்சிகள், சுயேச்சை குழுக்கள் சார்ந்து 91 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட் டுள்ளன. யாழ்ப்பாணம் தேர்தல் மாவட் டத்தில் 44 கட்சிகள் மற்றும் சுயேச்சை களும் வன்னி தேர்தல் மாவட்டத்தில் 47 கட்சிகள் மற்றும் சுயேச்சைகளும் போட்டியிடுகின்றன. இந்த மாகாணத் தில் 12 ஆசனங்களை கைப்பற்றுவதற் காக 819 போட்டியிடுகின்றனர்.

இதேபோன்று, கிழக்கு மாகாணத் தில் கட்சிகள், சுயேச்சைகள் சார்ந்து 144 வேட்புமனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள் ளன. திருகோணமலையில் 31 கட்சிகள், சுயேச்சைகளும் மட்டக்களப்பில் 49 கட்சிகள், சுயேச்சைகளும் திகாமடுல்ல (அம்பாறை) மாவட்டத்தில் 64 கட்சிகள், சுயேச்சைகளும் போட்டியிடு கின்றன. இந்த மாகாணத்தில் 16 ஆசனங்களை பெறுவதற்காக 1,249 வேட்பாளர்கள் களமிறங்கியுள்ளனர்.

திருகோணமலையில் 4 ஆசனங்க ளுக்காக 217 பேரும் மட்டக்களப்பில் 5 ஆசனங்களுக்காக 392 பேரும் திகா மடுல்லவில் 7 ஆசனங்களுக்காக 640 பேர் களமிறங்கியுள்ளனர் என்பது குறிப் பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# வடக்கில் காணிப் பிரச்னையை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை

## ரில்வின் சில்வா உறுதிமொழி



கொழும்பு, 12

**வடக்கில் காணி பிரச்னையென்பது பெரும் பிரச்னையாக உள்ளது. அதனை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.**

தெற்கில் இல்லாத பல பிரச்னைகள் வடக்கில் உள்ளன. இவற்றுக்கு 13 மட்டும்தான் தீர்வல்ல. மொழிப் பிரச்னை உள்ளிட்ட விடயங்களை தீர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனவும் அவர் கூறினார்.

இது தொடர்பில் ரில்வின் சில்வா தெரிவிக்கையில்-

வடக்கு-கிழக்கில் தேசிய மக்கள் சக்தியாக நாம் முழு அளவில் செயற்படவில்லை. இதனால்தான் தேர்தலின்போது முழு அளவில் வாக்குகள் கிடைக்கவில்லை. எனினும், கடந்த காலங்களைவிட இம்முறை வாக்குகள் அதிகரித்துள்ளன.

அவற்றை மேலும் அதிகரித்துக்கொள்வதற்கு முயற்சி எடுக்கப்படும். வடக்கு - கிழக்கில் இருந்தும் எமது கட்சி சார்பில் தலைவர்கள் உருவாகவேண்டும்.

நாம் முகவர்கள் ஊடாக வடக்குக்கு வரவில்லை. நேரடியாக வந்தோம். அப்படி இருந்தும் மக்கள் எமக்கு வாக்களித்தனர்.

வடக்கில் காணி உட்பட பல பிரச்னைகள் உள்ளன. எனவே, காணி கச்சேரி உள்ளிட்ட நடவடிக்கைகள்மூலம் இக்காணி பிரச்னைக்கு தீர்வு காணப்பட வேண்டும். அங்கு வாழும் மக்களின் பொருளாதாரத்தைப் பலப்படுத்த வேண்டும். தமது தாய்மொழியில் பணிகளை முன்னெடுக்கக்கூடிய சூழல் இருக்கவேண்டும் - என்றார். (அ)

# எமில்காந்தன் சுயேச்சையாக போட்டி!



வவுனியா, ஒக். 12

வன்னித் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவை எமில்காந்தன் நேற்று தாக்கல் செய்தார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் இடம்பெறவுள்ள பாராளுமன்ற தேர்தலில் எமில்காந்தன் தலைமையிலான வேட்பாளர்கள் குழு சுயேச்சையாக போட்டியிடுகின்றது.

இந்நிலையில் வவுனியா மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள தேர்தல் காரியாலத்தில் நேற்று காலை வேட்புமனுவை அவர்கள் தாக்கல் செய்தனர்.

எமில்காந்தன் முன்னர் விடுதலைப் புலிகளின் நிதிப் பிரிவில் பணியாற்றியிருந்தார். இதனால் அவரை இலங்கை அரசு முன்னர் கறுப்புப் பட்டியலில் இணைத்திருந்தது.

ஆயினும் அவரது பெயர் கடந்த ஆண்டு அந்தப் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மதுபானசாலை அனுமதி பெறவில்லை என வெளிப்படையாக வாக்குமூலம் வழங்குங்கள்!

## வேட்பாளர்களிடம் கோருகிறார் கீதநாத்

யாழ்ப்பாணம், ஒக். 12

யாருக்கும் மதுபானச்சாலை அனுமதி பெற்றுக் கொடுக்கவில்லை என வெளிப்படையாக வாக்குமூலம் வழங்குமாறு பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பொதுஜன பெரமுனவின் யாழ். மாவட்ட வேட்பாளர் கீத்நாத் காசிலிங்கம் சவால் விடுத்துள்ளார்.

இன்று அவர் பதிவிட்டுள்ள சமூக வலைத்தளப் பதிவிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில்-

"நான் என்னுடைய வேட்புமனுவை தாக்கல் செய்துவிட்டேன். உங்களின் அன்பான வாழ்த்துகளுக்கு நன்றி.

அத்துடன் நான் எனக்கோ என்னுடைய குடும்பத்துக்கோ, உறவினர்களுக்கோ, நண்பர்களுக்கோ அல்லது எனக்குத் தெரிந்த யாருக்கோ மதுபானச்சாலை அனுமதிப்பத்திரத்தைக் கோரவோ அல்லது மத்தியஸ்தம் பண்ணவோ இல்லை என்பதை உறுதிப்படுத்தி வெளிப்படையாக ஒரு வாக்குமூலத்தை வழங்குகிறேன்.

மாவட்டத்தின் என் சக வேட்பாளர்கள் குறிப்பாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களும் அதையே செய்ய வேண்டும் என நான் சவால் விடுக்கிறேன்.

அண்மைய மாதங்களில் வடக்கில் பல மதுபானக்கடைகள் தோன்றியதன் காரணமாக நாளாந்தக் கூலித்தொழிலாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதுடன் அப்பிரதேசங்களில் உள்ள பாடசாலைகள் மற்றும் பிள்ளைகளுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது" எனக் குறிப்பிடப்பட்டுள்ளார். (அ)

# தமிழர் விடுதலைக் கூட்டணி தெற்கிலும் போட்டியிடுகிறது

கிளிநொச்சி, ஒக். 12

தமிழர் விடுதலைக் கூட்டணி வடக்கு கிழக்குக்கு அப்பால் தெற்கிலும் போட்டியிடவுள்ளதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மயில்வாகனம் திலகராஜ் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத் தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் உதயசூரியன் சின்னத்தில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மயில்வாகனம் திலகராஜ் போட்டியிடவுள்ள நிலையில் வேட்புமனுவில் கையெழுத்திடும் நிகழ்வு கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகத்தில் நேற்று முன் தினம் நடைபெற்றது.

இதைத் தொடர்ந்து நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார். (அ)

# சுகாதார அமைச்சுக்குள் பெரும் ஊழல், மோசடிகள்

## விசாரணைக்கு விசேட குழுவை நியமிக்க பிரதமரிடம் கோரிக்கை

கொழும்பு, ஒக். 12

சுகாதார அமைச்சுக்குள் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல் மற்றும் முறைகேடுகளை விசாரணை செய்ய உடனடியாக விசேட குழுவொன்றை நியமிக்குமாறு பிர தமர் ஹரிணி அமரசூரியவிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக இலங்கை கதிரியக்க தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த விடயங்கள் தொடர்பிலான தகவல்களை மேற்படி குழுவிற்கு வழங்க தயாராக உள்ளதாக சங்கத்தின் தலைவர் சானக தர்மவிக்ரம கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போதைய பிரதமர் சுகாதார அமைச்சராகவும் பணியாற்றி வருகிறார். அதனால் அவரிடம் இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளோம்.

கடந்த காலங்களில் அதிக அளவில் ஊழல், மோசடிகள் அமைச்சுக்குள் இடம்பெற்றுள்ளன. புதிய ஜனாதிபதியும், சுகாதார அமைச்சராக கடமையாற்றும் பிரதமரும் இவ்விடயம் தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

புதிய ஜனாதிபதியும் சுகாதார அமைச்சரும் விசாரணை நடத்த குழுவொன்றை நியமிப்பதற்கு உடனடியாக செயற்படுவார்கள் என நம்புகின்றோம். நியமிக்கப்படும் குழு கடந்த காலத்தில் இருந்தவை போன்று இருக்கக் கூடாது. அது சுயாதீன குழுவாக இருக்க வேண்டும்.

சுகாதாரப் பாதுகாப்பு தொழிற்சங்கத் தலைவர்களும், சுகாதாரப் பணியாளர்களும் தாம் அறிந்த மோசடி மற்றும் ஊழல் நடவடிக்கைகள் பற்றிய தகவல்களை வெளியிடுவதற்கு ஏற்ற சூழலை உருவாக்க வேண்டும். - என்றார். (அ)

# உலக உணவுத் திட்டத்தின் வேலைத்திட்டம் தொடரும்

## அதன் பிரதிநிதிகள் உறுதி



கொழும்பு, ஒக். 12

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க மற்றும் உலக உணவுத் திட்டத்தின் பிரதிநிதிகள் குழுவினர் நேற்று முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்தனர்.

உலக உணவுத் திட்டத்தின் ஊடாக இலங்கையில் தற்போது நடைமுறைப்படுத்தப்படும் வேலைத்திட்டத்தை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்துவதற்கு பிரதிநிதிகள் இதன்போது இணக்கம் தெரிவித்தனர்.

இலங்கையில் உணவு நெருக்கடி நிலைமை தற்போது குறைவாக உள்ள போதிலும், தேவை ஏற்படும்போது புதிய வேலைத்திட்டங்கள் மூலம் இலங்கைக்கு ஆதரவளிக்க உலக உணவுத் திட்டத்தின் தலைவர்கள் ஜனாதிபதியின் செயலாளரிடம் விருப்பம் தெரிவித்தனர்.

உலக உணவுத் திட்டத்தின் உள்ளூர்ப் பணிப்பாளர் அப்துல் ரஹீம் சித்திக், அரசாங்க பங்காளித்துவ அதிகாரி முஸ்தபா நிஹ்மத், உலக உணவுத் திட்டத்தின் பிரதி வதிவிடப் பிரதிநிதி ஜெர்ட் ரெபெல்லோ, ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் ரொஷான் கமகே ஆகியோர் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர். (அ)

# சீரற்ற காலநிலையினால் 298 குடும்பங்கள் பாதிப்பு!

கொழும்பு, ஒக். 12

நாடு முழுவதும் தொடரும் சீரற்ற காலநிலைக் காரணமாக 298 குடும்பங்களைச் சேர்ந்த 1,107 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் கூறியுள்ளது.

களுத்துறை, கம்பஹா, கிளிநொச்சி மற்றும் கேகாலை ஆகிய மாவட்டங்களே அதிகளவு பாதிக்கப்பட்ட மாவட்டங்கள் ஆகும்.

குறித்த பகுதியில் பதிவான அனர்த்தம் காரணமாக 10 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. ஆறு குடும்பங்களைச் சேர்ந்த 24 பேர் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

தொடரும் சீரற்ற வானிலையால் நாட்டின் சில பகுதிகளுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ)



இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 12.10.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org